REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 ஏப்ரல் 13 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN
வரு. 91 இல. 88 | Thursday 13, April, 2023 | 12 பக்கங்கள் | 50/-

## ஆறுதல் தருகின்ற புதுவருடமாக இந்தப் புத்தாண்டு மலரட்டும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுவருட வாழ்த்து



இன, மத, கட்சி, நிற பேதங்களை புறந்தள்ளிவிட்டு புதிய நோக்குடன் முன்னோக்கிப் பயணிக்க இந்த சித்திரைப் புத்தாண்டில் திடசங்கற்பம் கொண்டால் இந்த புத்தாண்டு மட்டுமன்றி, எதிர்காலத்தையும் நலம் மிக்கதாக அமைத்துக்கொள்ள முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு பெயர்ச்சி அடைவதைத் தொடர்ந்து உதயமாகும் தமிழ்,

04

## தமிழ்,சிங்கள புத்தாண்டு தேசத்தின் மாபெரும் கலாசார விழாவாகும்



ஒரே சுபநேரத்தில், தனித்துவமான பல்வேறு பாரம்பரியங்களை மரபுரிமையாகக் கொண்ட தினமாக சிங்கள தமிழ் சித்திரைப் புத்தாண்டு திகழ்வதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். அச்செய்தியில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இம்முறை நாடு எதிர்கொண்ட உணவு மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில், புத்தாண்டின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி, விளைச்சலினால் நாட்டை செழிப்படையச் செய்வதற்காக எமது விவசாய சமூகத்தினர் மேற்கொண்ட சவால்மிக்க பணிகளை இந்தப் புத்தாண்டில் நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

இயற்கையோடு உறவாடிய எமது முன்னோர்கள் புத்தாண்டில் அதனை இன்னும் நிஜமாக்கினர்.

04

## சகலரும் சமமென மகிழும்காலம் நம் மத்தியில் நீடித்து நிலவட்டும்!



பிறக்கும் சித்திரை புத்தாண்டில் சகல இன மத சமூக மக்களும் சமமாக நோக்கப்படும் மகிழ்ச்சியான காலம் நீடித்து நிலவட்டுமென, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"இன மத பேதங்களின்றி, தமிழ் சிங்கள மக்களை பண்பாட்டு விழுமியங்களால் ஒன்று பட வைத்திருப்பது சித்திரை புத்தாண்டு. அது போலவே சகல மக்களின் இன மத உணர்வுகளும் சமனென மதிக்கப்படும் சமத்துவ தேசத்தையே நாம் விரும்புகிறோம்.

மனித நேயமே எமது மதம். எமது மக்களின் இன மத

04

### இனங்களுக்கிடையே ஒற்றுமை, சகவாழ்வை ஏற்படுத்துவதே ஜனாதிபதியின் இலக்கு

# நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்ப விரைவில் அமைச்சரவை உபகுழு

### மூன்று கட்டங்களாக முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் தீர்மானம்

**13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி சகல கட்சிகளினதும் ஒத்துழைப்பைப் பெற்று அனைத்து இன, மத,மொழி மக்களிடையேயும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம் என்கிறார் அமைச்சர் அலி சப்ரி**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையில் அமைச்சரவை உப குழுவொன்றை ஸ்தாபிக்கவுள்ளதாகவும் மூன்று கட்டங்களாக அதனை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி, பாராளுமன்றத்தின் அனைத்து கட்சிகளினதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டு அனைத்து இலங்கையருக்கும் கிடைக்க வேண்டிய கௌரவத்தை உரிய வகையில் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் விரிவான இணக்கப்பாட்டை கொண்டு வருவதே அந்த அமைச்சரவை உப குழுவின்

04

## சோபகிருது வருடப் பிறப்பு

**● வாக்கிய பஞ்சாங்கத்தின் படி**

**புது வருடம் பிறக்கும் நேரம்:** சித்திரை முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.03க்கு

**● விஷு புண்ணிய காலம்:**
வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 இல் இருந்து பிற்பகல் 06.03 வரை

**● மருத்து நீர் வைத்தல்**
பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவெளிக்கு அமைய, சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

**● புத்தாடை**
வாக்கிய பஞ்சாங்கத்தின்படி வெள்ளை நிறம் உள்ள பட்டாடை ஆயினும் வெள்ளை கரை அமைந்த புதிய பட்டாடை ஆயினும் அணிய வேண்டும்

**● புது வருட ஆபரணம்**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி முத்து வைரம் இழைத்த ஆபரணம்

**● கைவிசேடம்**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04. 2023) சனிக்கிழமை காலை 07.52 முதல் 09.00 மணி வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.49 முதல் 9.48 வரை

**● புதுக்கணக்கு**
வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 28 (11.05.2023) வியாழக்கிழமை பகல் 10.24 முதல் நண்பகல் 12.27 வரை

**● திருக்கணித பஞ்சாங்கப்படி**
சித்திரை மாதம் முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 .59க்கு

**● விஷு புண்ணிய காலம்:**
வெள்ளிக்கிழமை முற்பகல் 10.59 இல் இருந்து மாலை 06.59 வரை

**● மருத்து நீர் தேய்த்தல்**
விஷு புண்ணிய காலத்தில் பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடைவேளையில் சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

04

கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா

## இருள் சூழ்ந்த யுகம் நீங்கி, வளமான புத்தாண்டு மலரட்டும்



வளமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்துக்காக உறுதியுடன் அணி திரள்வதற்கான வலிமையைப் பெற பிரார்த்திப்பதுடன் இருள் சூழ்ந்த யுகம் நீங்கி வளமான புத்தாண்டு மலரட்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதத்தில் மீன ராசியிலிருந்து

04

## மன நிறைவுடன் மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக அமையட்டும்



மலர்ந்துள்ள தமிழ், சிங்கள புத்தாண்டு சகலருக்கும் மறுமலர்ச்சி, மட்டற்ற மகிழ்ச்சி மற்றும் மனம் நிறைந்த ஆண்டாக மலர, இறைவனைப் பிரார்த்திப்பதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு

04




## பல்கலை விரிவுரையாளர்களின் போராட்டம் கைவிடப்பட்டது

### திங்கள் முதல் கற்கைகள் வழமைக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஒரு மாத காலமாக மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று கைவிடப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 9ஆம் திகதி முதல் அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தது.

அந்த வேலை நிறுத்தப் போராட்டத்தை நேற்று கைவிட்டுள்ளதாகவும் அதற்கிணங்க எதிர்வரும்

04

## மூத்த ஊடகவியலாளர் பொ.மாணிக்கவாசகம் காலமானார்




இலங்கையின் மூத்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகம் தனது 76 ஆவது வயதில் காலமானார்.

யுத்த காலங்களில் லண்டன் பிபிசிக்காக இவர் வழங்கி வந்த செய்திகள், தமிழ் மக்கள் மத்தியில் இவருடைய ஆளுமையை வெளிப்படுத்தியிருந்தது.

செய்திகளை நடுநிலை தன்மையோடு, உள்ளதை உள்ளபடியே சொல்லி, யுத்த நிலைமையையும் தமிழ் மக்களின்

04




## இன்றும் நாளையும் அனைத்து மதுபான நிலையங்களும் பூட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தமிழ், சிங்கள புதுவருடத்தையொட்டி இன்று (13) நாளை (14) திகதிகளில் நாடு முழுவதுமுள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நேற்று கலால் திணைக்களம் விசேட அறிவிப்பொன்றையும் வெளியிட்டுள்ளது. திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளரும் கலால் வரி ஆணையாளருமான கபில குமாரசிங்க தெரிவிக்கையில், மேற்படி தினங்களில் மதுபான

விநியோகம் மற்றும் அதனோடு உள்ளிட்ட நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கு விசேட செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில்

04

## அன்பான வாசகர்களுக்கு...

சித்திரை புத்தாண்டு விடுமுறை காரணமாக நாளை14ஆம் திகதியும் நாளை மறுதினம்15 ஆம் திகதியும் தினகரன் நாளிதழ் வெளிவர மாட்டாதென தெரிவித்துக்கொள்கிறோம். 17 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் தினகரன் நாளிதழ் வழமைபோன்று வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.

அதே போன்று எதிர்வரும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தினகரன் வாரமஞ்சரி நாளிதழும் வெளிவர மாட்டாதென்பதுடன்

23 ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி வழமைபோன்று வெளிவரும் என்பதையும் எமது அன்பான வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.

**பிரதம ஆசிரியர்**

# சித்திரை புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

## தமிழ் – சிங்கள மக்களின் ஆரோக்கியமான

## வளங்களை உருவாக்கும் புத்தாண்டாக அமைய வேண்டும்



தமிழ் சிங்கள மக்களின் ஆரோக்கியமான வளங்களை உருவாக்கும் ஆண்டாக இந்த புத்தாண்டு அமைய வேண்டும் என பிரார்த்திப்பதோடு இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன் என சபாநாயகர், மஹிந்த யாப்பா அபேவர்தன தனது தமிழ் சிங்கள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடரும் வாழ்த்துச் செய்தியில்,.

கடந்த சில வருடங்களாக நாடு மற்றும் உலகம் என்ற ரீதியில் நாம் பல சவால்களைச் சந்தித்திருந்தபோதிலும் புத்தாண்டின் மதிப்பை இழக்கவில்லை.

புத்தாண்டு எமது பழக்க வழக்கங்களை உலகத்துக்குப் பறைசாற்றும் கண்ணாடியாகவும் திகழ்கிறது. தற்போதுள்ள பாரம்பரிய ஊடகங்கள் மற்றும் நவீன ஊடகங்கள் இதற்கான சாளரத்தை உலகுக்குத் திறந்து விடுகின்றன.

புத்தாண்டில் எமது செலவை அதிகரிக்கும் பொருட்கள், கருவிகளைச் சேர்ப்பதைவிட எண்ணங்களில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துவது மதிப்பு மிக்கதாக அமையும்.

## துன்பங்களை மறந்து மகிழ்ச்சியை உண்டாக்கும் புத்தாண்டாக அமையட்டும்

மாவத்தகம தினகரன் நிருபர்

நாடு பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை பெற்று வரும் இன்றைய சூழ்நிலையில் சித்திரைப் புத்தாண்டை வெகு விமர்சையாக கொண்டாடும் அனைத்து உலகத் தமிழ் மக்களுக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமிதம் அடைகின்றேன் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் ஏ. அரவிந்தகுமார் தெரிவித்தார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தமிழ் சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,... கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி என்ற வார்த்தைக்கு ஏற்ப உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் அனைவரும் புத்தாண்டை கொண்டாடுகின்றார்கள்.



நாம் எம்மிடையே காணப்படும் கருத்து வேற்றுமைகளையும் அரசியல் முரண்பாடுகளையும் விட்டெறிந்து தம் சமூகத்தின் மேம்பாட்டுக்காக எல்லோரும் பரஸ்பரம், புரிந்துணர்வு, நல்லெண்ணத்துடனும் எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையோடு பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டுள்ள எமது நாட்டையும் எமது மலையக சமுதாயத்தையும் கட்டி எழுப்ப முன்வருதல் வேண்டும்.

தமிழர்களின் பண்பாடு பாரம்பரியம் கலாசாரங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழ் புத்தாண்டுப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இன்றைய தினத்தில் எம்மவர்களின் வாழ்வில் மகிழ்ச்சியும், ஆனந்தமும் மலர வேண்டும். கழிந்த வருடத்தில் நிகழ்ந்த துன்பங்களையும் துயரங்களையும் மறந்து மகிழ்ச்சியோடு புத்தாண்டைக் கொண்டாடுவோம் என்று அவர் தனது வாழ்த்துச் செய்தில் மேலும் தெரிவித்தார்.

## சித்திரை புத்தாண்டிலிருந்து இலங்கை வளர்ச்சி பாதைக்கு செல்ல பிரார்த்திப்போம்

### இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான்

இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் ஏற்படுத்தும் பண்டிகையாகவுள்ள சித்திரை புத்தாண்டில் அனைத்து மக்களின் வாழ்வில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

செந்தில் தொண்டமான், வெளியிட்டுள்ள சித்திரை புத்தாண்டு வாழ்த்து செய்தியில்,

மலர்ந்திருக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டு சகல மக்களுக்கும் நல்ல ஆரோக்கியத்தையும், சுபிட்சத்தையும், சௌபாக்கியங்களையும் வழங்கி மகிழ்ச்சிகரமான வாழ்க்கைக்கு வழியேற்படுத்த வேண்டும். இலங்கையில் இந்து தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்கள் பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டை கொண்டாடுகிறார்கள்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அனைவருடைய வாழ்க்கையிலும் பல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையில் இருந்து நாட்டை மீட்பது அனைவருடைய கடமையாகும். இலங்கை எதிர்கொண்டுள்ள இந்த இக்கட்டான சூழ்நிலைகள் நீங்கி மக்களின் வாழ்க்கை விரைவில் இயல்புநிலைக்கு திரும்ப வேண்டும்.



## சித்திரைப் புத்தாண்டு எமது பலம், ஒற்றுமையை நிலை நிறுத்தும் நன்னாளாக வேண்டும்

### பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன்

தலவாக்கலை குறூப் நிருபர்

பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு நமது பலம்,ஒற்றுமை என்பவற்றை நிலை நிறுத்தி எழுச்சி கொள்ளும் சமூகமாய் இன்புற்று வாழ்வதற்கு வழியமைக்கட்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



இலங்கை வாழ் சமூகத்தினருக்கு வளமான வாழ்வும் குறைவற்ற செல்வமும், கிடைத்திட வேண்டும். சித்திரைப் பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக் கூடியது. இன,மத, மொழி,சாதி,சமய வேறுபாடுகளைக் கலைந்து எல்லோரும் ஒருதாய் மக்களென உலகறியச் செய்யும் சிறப்பு நாளாகும்.சித்திரைப் புத்தாண்டில் மனிதம் நிரந்தரமாய் நிலைத்து புதிய சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்று வழிமறிக்கும் தடைகளைத் தகர்த்து மகிழ்ச்சி பொங்கும் நன்நாளாக அமைய இறைவனை பிரார்த்திப்பதோடு இந்நாளில் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.




## நெருக்கடி சூழலை போக்க நாம் அனைவரும் ஒரு தேசமாக ஒன்றிணைவது அவசியம்

துன்பத்தை வென்று மகிழ்ச்சியை அடையும் எதிர்பார்ப்பை குறிக்கும் தமிழ் சிங்கள புத்தாண்டானது நம் அனைவரதும் மாபெரும் கலாசார பெருவிழாவாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும் ஜனாதிபதியின் தொழிற்சங்க பணிப்பு குழுவின் உறுப்பினருமான எஸ்.ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

புதிதாக பிறக்கும் புத்தாண்டில் நம் நல்லெண்ணங்களை அடைவதை நோக்கமாகக் கொள்வதே அனைவரது எதிர்பார்ப்பாகும். நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையை கடந்து செல்வதற்கு நாம் அனைவரும் ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இச்சவால் மிகுந்த காலகட்டத்தில் எதிர்பாராத விதமாக நாம் அனைவரும் முகங்கொடுத்த, கொடுத்துவரும் துன்பங்களை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்பதற்கு தேவையான எதிர்கால திட்டங்களை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஏற்கனவே செயற்படுத்தி வருகின்றது.



உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் இப்புத்தாண்டு அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த சிறப்பான ஆண்டாக அமைய பிரார்த்திக்கின்றேன்.



யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கு வாராஹிபுரம் அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் கொடியேற்ற நிகழ்வில் பிடிக்கப்பட்ட படம்.



பேருவளை சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை 2014ம் ஆண்டின் க.பொ.த.சாதாரண தர வகுப்பு மாணவர்களின் ஏற்பாட்டிலான ஒன்று கூடலும் இப்தார் நிகழ்வும் (8) பேருவளை மருதானை மனாரா பீச் ஹோட்டலில் நடைபெற்ற போது பிடிக்கப்பட்ட படம். (படம் – பேருவளை விசேட நிருபர்)

# அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் கிடைத்திட இறை பிரார்த்தனை செய்வோம்

**கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**



ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப்பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றி வர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 நொடிகள் ஆகின்றது.

இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும். சூரியன் மேச இராசியில் பிரவேசிக்கும்போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது.

ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

சோபகிருது எனும் மங்கலநாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது. இவ்வருடம் எமது மக்களினதும் ஏனைய சமூகத்தினதும் அனைத்து இடர்களும் நீங்க வேண்டும்.

ஒவ்வொருவரினதும் சமூகத்தினதும் தனித்துவம், வழிபாட்டு சுதந்திரம், கருத்துச்சுதந்திரம், பண்பாட்டு விழுமியங்கள் மதித்து பேணப்பட வேண்டும்.

இவ்வாறான நிலை பேணப்பட்டு அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான இன்ப வாழ்வும் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்று நிலைக்க வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்கின்றோம்.

# மாணிக்கவாசகத்தின் மறைவுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்

இலங்கை ஊடகத்துறையின் ஆளுமைகளில் ஒருவரான மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகத்தை நிரந்தரமாக இழந்திருப்பது மீளமுடியாத துயரில் உறையச் செய்துள்ளதென தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரும், முன்னாள் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான பி.மாணிக்கவாசகத்தின் மறைவு எம்மை மீளா அதிர்ச்சிக்கும் ஆழ்ந்த கவலைக்குள்ளும் உறையச் செய்துள்ளது.

1998ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவர் கைது செய்யப்பட்டு விடுதலையாகிய பின்னர் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை மையப்படுத்தி சங்கமொன்றை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனைகளைக் கொண்டிருந்தவர்களில் அவரும் ஒருவராக இருந்தார்.

அத்துடன், தனது சிந்தனையை செயல்வடிவப்படுத்துவதில் ஏனைய ஊடகவியலாளர்களுடன் தோளோடு தோள்நின்று உழைத்தார். இதன் பயனாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் உருவாகியது. அதில் அவர் இரு தடவைகள் தலைமைப்பதவியை ஏற்றுச் செயற்பட்டிருந்தமையும் வரலாறு.

வீரகேசரி, ரொய்ட்டர்ஸ், பி.பி.சி. உள்ளிட்ட பல்வேறு செய்தி நிறுவனங்களுக்கு தனது அந்திம காலம் வரையில் அறிக்கையிட்டு வந்திருந்த அவர், போர்க்காலம் உள்ளிட்ட விசேட நிலைமைகளில் மிகவும் காத்திரமான ஊடகப்பணியை துணிச்சலாக ஆற்றியிருந்தார்.

பத்திகள், கட்டுரைகள், விசேடகள அறிக்கைகள் என்று பல்வேறு பேசவல்ல விடயங்களை வெளிக்கொண்டுவந்திருந்த இவர் ஊடகத்துறைக்கு அப்பால் பல்பரிமாணங்களைக் கொண்டவர்.

அதுமட்டுமன்றி, பாரம்பரிய ஊடகத்துறையூடாக ஊடகத்துறைக்குள் பிரவேசித்த அவர், தொடர்ந்து தசாப்தங்களில் நவீன ஊடகங்களிலும் பணியாற்றிய பெருமைக்குரியவர். பல்வேறு சர்வதேச பயிற்சிகளைப் பெற்றுக் கற்றறிந்தவராக விளங்கிய அவர், இலங்கையில் பல பாகங்களிலும் இளம் ஊடகவியலாளர்களின் வளர்ச்சிக்காக பயிற்சிப்பட்டறைகளில் பங்கேற்று கற்பித்தல்களை மேற்கொண்டதாகவும் அந்த அனுதாபச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# இறுதிப்பத்தை பயன்படுத்துவோம்

நாம் ரமழானின் இறுதி பகுதியில் இருக்கிறோம். நற்காரியங்களை ஆற்றி அல்லாஹ்வை நெருங்குவதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இக்காலப்பகுதி காணப்படுகிறது. அதிலும் இறுதிப்பத்து தினங்களும் மிகவும் மகத்துவமானவை.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்காக விரைந்து செயற்படுவோம். 'உங்களது இரட்சகனிடமிருந்து மன்னிப்பையும் வானங்கள் பூமியளவு விசாலமான சுவனத்தையும் அடைந்துகொள்வதற்காக விரைந்து செயற்படுங்கள். இது இறையச்சம் உள்ளவர்களுக்காக தயார் செய்யப்பட்டுள்ளது. (ஆல இம்ரான் 133)

நன்மைகளை அதிகமாக அடைந்து கொள்வதற்காக போட்டி போட்டுக் கொண்டு செயற்பட வேண்டும். 'உங்களது இரட்சகனிடமிருந்து மன்னிப்பையும் வானம், பூமியளவு விசாலமான சுவனத்தையும் அடைந்துகொள்வதற்காக போட்டி போட்டுக்கொண்டு செயற்படுங்கள்' (ஹதீத் 21).

நல்ல விடயங்களில் போட்டி போடுவதும் தூண்டப்பட்டுள்ள ஒரு விடயமாகும். 'நல்ல விடயங்களில் போட்டி போட்டுக்கொண்டு செயற்படுங்கள். (பகரா 148, மாஇதா 48)

'கடுமையான இருளிலே தட்டுத்தடுமாறுகின்ற நிலைபோன்று குழப்பமான நிலமைகள் தோன்றுவதற்கு முன்னர் விரைவாக செயற்படுங்கள். காலை நேரத்தில் விசுவாசியாக இருப்பவன் மாலையில் நிராகரிப்பாளனாக மாறிவிடலாம். மாலை நேரத்தில் விசுவாசியாக இருப்பவன் காலையில் நிராகரிக்கின்ற ஒருவனாக மாறிவிடலாம். அற்பமான உலக நோக்கத்துக்காக மார்க்கத்தை விற்றுவிடுவான்' (ஆதாரம் முஸ்லிம் 5383)

ரமழானின் இறுதி பத்து தினங்கள் வந்துவிட்டால் நபி (ஸல்) அவர்கள் தனது ஆடையை வரிந்து கட்டிக் கொள்வார். இரவை உயிர்ப்பிப்பார். தனது குடும்பத்தவர்களையும் எழுப்பி விடுவார். (ஆதாரம் புஹாரி).

இறுதிப் பத்து தினங்களை வணக்கங்கள், கொடைகள், அல்குர்ஆனுடனான தொடர்புகளால் நபியவர்கள் உயிர்ப்பித்தார்கள். இதற்காக பள்ளிவாசல்களில் தரித்திருப்பார். ஆயிரம் மாதங்களைவிட சிறந்த லைலதுல் கத்ர் என்ற இரவை அடைவது அவரது நோக்கமாக இருந்தது. நாமும் இத்தினங்களில் அதிக நன்மைகளை அடைந்துகொள்வதற்காக பெருமுயற்சி எடுத்துக்கொள்வோம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

# பொதுமக்களின் பாதுகாப்பு கருதி புலனாய்வு பொலிஸார் கடமையில்

## நகைகள் அணிந்து செல்வதை தவிர்க்குமாறும் அறிவுறுத்தல்

சித்திரை புத்தாண்டை முன்னிட்டு பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி பொலிஸ் அதிகாரிகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

பண்டிகை காலத்தில் பல்வேறு மோசடிச் சம்பவங்கள் இடம்பெறலாம்.

எனவே இது குறித்து பொதுமக்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

காலாவதியான பொருட்கள் கவர்ச்சிகரமான முறையில் குறைந்த விலைகளில் விநியோகிக்கப்படுகின்றன. இதில் கவனமாக இருக்க வேண்டும்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளும் குழுக்கள் மற்றும் நபர்கள் போலி நாணயத்தாள்களை புழக்கத்தில் விடுகின்றனர்.

மேலும் பொருட்கொள்வனவுக்கு அல்லது இதர தேவைகளுக்கு வெளியில் செல்பவர்கள் பெறுமதிமிக்க தங்க நகைகள் அணிவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். பணப்பை உள்ளிட்ட பெறுமதி மிக்க பொருட்கள் குறித்து அவதானமாக செயற்பட வேண்டும்.

ஏனெனில் பல்வேறு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை மேற்கொள்ளும் தரப்பினர் பொது இடங்களிலேயே அதிகம் சுற்றித் திரிகின்றனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்களை கண்காணிக்க அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அவர்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக கடுமையான தண்டனை வழங்கப்படும்.

பொது மக்களின் பாதுகாப்பு கருதி நெரிசலான பகுதிகளில் பாதுகாப்பு பிரிவினர் நிறுத்தப்பட்டுள்ளனர். மேலும் குற்றப்புலனாய்வு பிரிவினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

சில பகுதிகளில் பொலிஸ் அதிகாரிகள் சாதாரண உடையில் இருக்கலாம்.

சித்திரை புத்தாண்டு விசேட விழாக்களை ஏற்பாடு செய்பவர்கள் அதில் பங்கேற்பவர்களின் பாதுகாப்பையும் கவனித்துக் கொள்ள வேண்டும். அவற்றை பொலிஸ் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.

# புத்தாண்டையொட்டி மேலதிக பஸ், ரயில் சேவைகள்

## 300 தனியார் பஸ் சேவைகள் நேற்று முதல் ஆரம்பம்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

தமிழ், சிங்கள புத்தாண்டு கொண்டாட்டங்களுக்காக சொந்த ஊர்களுக்கு செல்லும் மக்களின் நலன் கருதி, இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தனியார் போக்குவரத்து சேவை என்பன மேலதிக பஸ் சேவைகளை நடத்துவதற்கு இணங்கியுள்ளன. அதற்கிணங்க வழமையான பஸ் சேவைகளுக்கு மேலதிகமாக 300 தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இச்சேவைகளை நேற்று முதல் ஆரம்பித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் தெரிவித்தன. அது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்த தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் நிலான் மிரெண்டா; இலங்கை போக்குவரத்து சபையும் மேலதிக பஸ்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தூரப்பிரதேச பஸ் சேவைகள் வழமை போன்று இன்று (13) வரை இடம்பெறுமெனவும் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# மத்திய வங்கியிலிருந்து 50 இலட்சம் ரூபா மாயம் விசாரணைகள் ஆரம்பம்

இலங்கை மத்திய வங்கியில் பணம் வெளியிடும் பாதுகாப்பு களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபாய் அடங்கிய நோட்டுக் கட்டொன்று காணாமல் போயுள்ளமை தொடர்பாக பாதுகாப்பு கமரா காட்சிகளை ஆராய்ந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கோட்டை பொலிஸ் நிலையத்தின் விசேட பொலிஸ் குழுவொன்று நேற்று(12) காலை தொடக்கம் மத்திய வங்கி வளாகத்திற்குள் சென்று தனது விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் நாணய திணைக்கள அதிகாரி ஜி. ஆர் தயானந்தவால் நேற்று முன்தினம்(11) செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த முறைப்பாட்டில் நிதி வெளியிடும் பாதுகாப்பு களஞ்சியத்துக்குள் அப் பிரிவை சேர்ந்த அதிகாரிகளைத் தவிர வேறு யாரும் நுழைய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான

# புத்தகப் பைகள், காலணிகளின் விலைகளை குறைக்க தீர்மானம்

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மாணவர்களுக்கான பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் காலணிகள் ஆகியவற்றின் விலைகளை குறைப்பதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் புதிய தவணை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாவதுடன் மாணவர்களுக்கான பாடசாலை புத்தகப் பைகள் மற்றும் சப்பாத்துக்களின் விலைகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

நிதி அமைச்சில் இடம்பெற்றுள்ள முக்கிய சந்திப்பு ஒன்றின் போது,

இந்த விலை அதிகரிப்பினால் பெற்றோர்கள் முகம் கொடுக்க நேர்ந்துள்ள அசௌகரியங்கள் தொடர்பிலும் அவர் அந்த அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியுள்ளார். அந்த வகையில் இப் பொருட்களின் விலைகளை குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அதேவேளை, டொலரின் பெறுமதி குறைந்து வரும் நிலையில் தேசிய சந்தைகளில் பாடசாலை மாணவர்களுக்கான புத்தகப்பைகள் மற்றும் சப்பாத்துக்களின் விலைகள் குறைவடைய வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், அது தொடர்பில் ஆராய்ந்து ஒரு வார காலத்திற்குள் தமக்கு அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறும் அவர் வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்கள அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேற்படி பொருட்களின் விலைகள் குறைவடையாத பட்சத்தில் அது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவித்து அதற்கான காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ரூ. 08 இலட்சம் போலி நாணயத் தாள்களுடன் 02 பேர் கைது

## அச்சு இயந்திரங்களும் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

5000 ரூபா பெறுமதியான 17 போலி நாணயத் தாள்களை வைத்திருந்தவரை கைது செய்துள்ளதுடன், அவரிடமிருந்த போலி நாணயத் தாள்களையும் கைப்பற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவன பகுதியில் சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவரிடமிருந்தே இந்த போலி நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்நாணயத் தாள்களை அச்சிட்டாரெனக் கருதப்படும் நபரையும் கைது செய்துள்ளதாக கடுவன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடுவன பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களையடுத்து, பின்தென்னே பகுதி சுற்றிவளைக்கப்பட்டது. இதன் போது, போலி நாணயத்தாள்களை உபயோகித்து

04

# முன்னாள் பிரதமர் அமரர் டட்லி சேனாநாயக்கா மறைந்து இன்றுடன் 50 வருடங்கள் பூர்த்தி

இலங்கையில் நான்கு தடவைகள் பிரதமராக பதவி வகித்த ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் தலைவரான டட்லி சேனாநாயக்க மறைந்து 50 வருடங்கள் இன்றுடன் (13) பூர்த்தியாகிறது.

1936 ஆம் ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டு வரை டெடிகம இராஜாங்க அமைச்சரான டட்லி சேனாநாயக்க 1947 ஆம் ஆண்டு தொடக்கம் 1956 வரையும் 1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரையும் 27 வருடங்கள் டெடிகம பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த அரசியல்வாதியாவார்.

1965 தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரை நாட்டு மக்கள்

04


National Lotteries Board — www.nlb.lk — 2023.04.11

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5087 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 15,774,263.00 — ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 6 4 2 5 0 2

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1542 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,113,367.20 — வெற்றி இலக்கங்கள் 1 7 2 5 8 6

ராசிபலன் — சீட்டிழுப்பு இலக்கம் 396 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,665,100.16 — வெற்றி இலக்கங்கள் 03 22 49 60

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1117 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,089,681.60 — ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 20 27 36 65

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1435 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 314,469,670.00 — N 04 — 22 46 49 72 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3329 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,182,215.44 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 19 36 57 70


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 211.25 | 225.29 |
| கனடியன் டொலர் | 232.02 | 247.26 |
| யூரோ | 340.65 | 360.74 |
| ஜப்பான் யென் | 2.3550 | 2.4949 |
| சிங்கப்பூர் டொலர் | 235.13 | 249.76 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.11 | 410.28 |
| சுவிஸ் பிராங்க் | 340.65 | 364.37 |
| அமெரிக்க டொலர் | 313.37 | 330.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 858.78 | கட்டார் ரியால் | 88.53 |
| குவைத் டினார் | 1,055.52 | சவூதி ரியால் | 86.32 |
| ஓமான் ரியால் | 840.95 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 88.15 |




கண்டி பதியுதீன் மஹ்மூத் மகளிர் கல்லூரியின் விசேட இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது. அதிபர் எம். ஐ. எம். ரிஸ்னா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பல்லின சமயத் தலைவர்கள், பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொண்டதை படங்களில் காணலாம். படம்: மாவத்தகம தினகரன் நிருபர்

# சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் இப்தார்

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்தார் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16) மாலை 5.15 மணிக்கு அவ்வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அவ்வித்தியாலய அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர்,

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹ்துன் நஜீம், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக்,

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், டாக்டர் ஏ.எல்.எம்.றிபாஸ், கிழக்கு மாகாண கணக்காய்வு திணைக்கள பிரதம கணக்காய்வாளர் எம்.எச்.எம்.றஷீட், கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜும்ஆ பள்ளிவாசல் பிரதம பொறுப்பாளர் ஏ.ஹிபத்துல் கரீம், பொறுப்பாளர் சபை செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், சாய்ந்தமருது மாளிகைக்காடு ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவர் அஷ்ஷெய்க் எம்.எம்.எம். சலீம், சாய்ந்தமருது மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ். எம்.முபாறக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி, டாக்டர் எம்.ஜே.கே. எம்.அர்ஷத் காரியப்பர், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன், சாய்ந்தமருது கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ. மலீக்,

சாய்ந்தமருது பிரதேச வைத்திய சாலை மாவட்ட வைத்திய அதிகாரி, டாக்டர் ஏ.எல்.எம்.அஜ்வத்,

மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பள்ளிவாசல் பேஷ் இமாம் ஏ.எம். எம்.மின்ஹாஜ், பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினரும், சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம், CMT கம்பஸ் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.எம்.ஜமீல், மெட்ரோபொலிட்டன் கம்பஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி சிராஸ் மீராசாஹிப், மயோன் குறூப் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி எம்.றிஸ்லி முஸ்தபா, ஹஸ்மியா குறூப் நிறுவன பிரதம நிறைவேற்று அதிகாரி ஏ.சி. யஹ்யாகான்,

றியோ மார்க்கட்டிங் நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் என்.எம். றிஸ்மிர், வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் எம்.ஐ.எம். றியாஸ், வீதி அபிவிருத்தி திணைக்கள பொறியியலாளர் எம்.எம்.எம். முனாஸ், சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணிப்பாளர் சபை தலைவர் எம்.எம்.உதுமாலெப்பை உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மின்சார வேலியில் சிக்கி இளைஞன் பலி

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா வடக்கில் வேலிக்கு பாய்ச்சிய மின்சாரத்தில் சிக்கி இளைஞனொருவன் உயிரிழந்த சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சம்பவ இடத்தை பதில் நீதிவான் தி.திருஅருள் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டார்.

உயிரிழந்தவர் கனராயன்குளம், குறிசுட்டகுளம் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய உலகநாதன் கஜந்தன் என தெரியவந்துள்ளது.

வவுனியா வடக்கு, சின்னடம்பன் பகுதியில் தொடர் யானைகள், பன்றிகளின் அச்சுறுத்தல் காரணமாக அங்குள்ள தோட்டக்காணியொன்றுக்கு வேலி போடப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. வேலிக்கு வீட்டிலிருந்து முறையற்ற வகையில் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மரம் வெட்டுவதற்காக வேலி ஊடாக சென்ற இளைஞன் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மரம் வெட்டுவதற்காக இளைஞருடன் மேலும் சிலரும் சென்றுள்ளனர். காணி உரிமையாளரிடம் வேலிக்கு மின்சாரம் செலுத்தப்பட்டுள்ளதா எனக் கேட்டுள்ளனர். எனினும் அவர் இதன்போது இல்லை என தெரிவித்தமையால் இளைஞன் வேலியால் சென்று மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் கனராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். வவுனியா நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் தி.திருஅருள் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமையை பார்வையிட்டதுடன், இது தொடர்பான முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. முறையற்ற வகையில் மின்சாரம் செலுத்திய குற்றச்சாட்டில் காணி உரிமையாளர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் மின்சார சபையால் வீட்டுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில்

# நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தை மீறிய 75 பேருக்கு அபராதம்!

**ஒலுவில் விசேட நிருபர்**

அம்பாறை மாவட்டத்தில் கடந்த மார்ச்சில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 75 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களினால் 3 இலட்சத்து 55 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்டப் பொறுப்பதிகாரி எஸ்.என்.எம்.சாலிய பண்டார தெரிவித்தார்.

அம்பாறை, தெஹியத்தகண்டி, அக்கரைப்பற்று, பொத்துவில், கல்முனை, சம்மாந்துறை ஆகிய நீதிமன்றங்களின் நியாயாதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட 78 சுற்றிவளைப்புகளின் போது, இந்த வர்த்தகர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும், 3 வர்த்தகர்களுக்கு நீதிமன்றினால் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதல் விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் செய்த முறைப்பாட்டையடுத்து, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸின் ஆலோசனைக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சோதனை மேற்கொண்டனர்.

அத்தியாவசியப் பொருட்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு பொருட்களை விற்பனை செய்தமை, வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, காலாவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ததாகவும், அவர் தெரிவித்தார்.

# அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் 05 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 26 அரச மருந்தக நிலையகங்களில் (ஒசுசல) தேவையற்ற செலவுகள் அடங்கலாக பல்வேறு காரணங்களால் 2021 ஆம் ஆண்டில் 05 கோடியே 32 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் குறிப்பிடுகின்றது.

தேசிய கணக்காய்வு அலுவலகம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, இரத்தினபுரி, ஸ்ரீ ஜயவர்தனபுர , பண்டாரகம மற்றும் மொனராகலை ஆகிய நான்கு அரச மருந்தகங்களில் 2020 ஆம் ஆண்டு, இலாபம் ஈட்டியிருந்தது. இருப்பினும் 2021ஆம் ஆண்டில் நஷ்டத்தை சந்தித்துள்ளன.

# நுவரெலியா வசந்த காலத்தில் அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை

## நுகர்வோர் விசனம்

நுவரெலியா வசந்த கால வர்த்தக நிலையங்களில் அதி கூடிய விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

நுவரெலியா ஏப்ரல் மாத வசந்த காலம் ஆரம்பமாகிய நிலையில் நாட்டில் பல்வேறு பாகங்களிலிருந்து நுவரெலியா மாவட்டத்தினை நோக்கி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் படையெடுத்த வண்ணம் உள்ளனர்.

பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாலும் சித்திரை புத்தாண்டுடில் நீண்ட விடுமுறை காணப்படுவதனாலும் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் நுவரெலியாவுக்கு விடு முறையினை கழிப்பதற்காக வருகை தந்துள்ளனர்.

வசந்த காலத்தினை வாய்ப்பாக பயன்படுத்தி நுவரெலியா நகர பகுதிகளில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிகூடிய விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா நகர பகுதியில் உள்ள சில வர்த்தக நிலையங்களில் அரசாங்கத்தால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சலுகை விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யப்படுவதில்லை எனவும், விலைக்கு மேலதிகமாக பணம் அறவிடப்படுவதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

நுவரெலியா கிரகறி வாவி பகுதியிலும் , பிரதான நகரிலும் இயங்கி வருகின்ற சில்லறை மற்றும் வசந்த கால தற்காலிக வர்த்தக நிலையங்களிலும் குறிப்பாக ஹோட்டகளில் உணவு உள்ளிட்ட அனைத்து பொருட்களும் அதிக விலைக்கே விற்பனை செய்து வருவதாகவும் எந்தவித கட்டுப்பாட்டு விலைக்கும் பொருட்கள் விற்கப்படுவதில்லை குறிப்பிட்டுள்ளனர்.

## மூத்த ஊடகவியலாளர் ...

அவலங்களையும் உலகுக்கு வெளிப்படுத்திய ஊடகவியலாளராக இவர் செயற்பட்டார்.. ரொய்ட்டர், BBC, மற்றும் வீரகேசரி பத்திரிகையின் ஊடகவியலாளரான அன்னார், பல உயிர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் துணிச்சலோடு செயற்பட்ட துணிச்சல் மிகு பேனா முனை போராளியாக செயற்பட்டவர்.

அமரர் மாணிக்கவாசகம் ஓய்வுபெற்ற வவுனியா தெற்கு பிரதி கல்விப்பணிப்பாளர் நாகேஸ்வரியின் அன்புக்கணவரும், வைத்திய கலாநிதி

பவித்திராவின் பாசமிகு தந்தையும், வைத்திய கலாநிதி தினேஸின் அன்பு மாமனாரும், தனேந்திராவின் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் வவுனியா வைரவபுளியங்குளம் 10 ஆம் ஒழுங்கையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று 13.04.2023 காலை 07 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து 09 மணிக்கு தட்சனாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

## தமிழ், சிங்கள புத்தாண்டு...

அவர்களின் வாரிசுகளான எமக்கு உணவுப் பாதுகாப்பு, சிக்கனம், எமது பாரம்பரியம் மற்றும் ஒற்றுமை பற்றி மீண்டும் மீண்டும் கூற வேண்டிய தேவையில்லை. செயற்படுதலே எமக்கு முன்னுள்ள தேவையாகும்.

கடந்த காலங்கள் எமக்கு சிந்திப்பதற்காக பல விடயங்களை விட்டுச் சென்றுள்ளன. தொற்றுநோய் அனர்த்தம், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிகள் போன்றன அண்மைக்கால வரலாற்றில் நாம் காணாத விடயங்களாகும். அவற்றை மீண்டும் சந்திக்காதிருப்பதற்கும் அடுத்த தலைமுறைக்கு அவற்றை விட்டுச் செல்லாதிருப்பதற்கும் புதிய சிந்தனைகளால் வளம்பெற்ற இனியதோர் புத்தாண்டு இன்றிலிருந்து மலரட்டும்.

## இன்றும் நாளையும்...

முறைப்பாடுகள் இருக்குமானால் 1913 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அதனைத் தெரிவிக்க முடியுமென்றும் அவர் மக்களை கேட்டுள்ளார்.

## ஆறுதல் தருகின்ற புதுவருடமாக...

சிங்களப் புத்தாண்டு இந்நாட்டின் தமிழ், சிங்கள மக்களுக்கு மிகவும் சிறப்பும், மகிழ்வும் நிறைந்ததாகும். சௌபாக்கியத்தையும் சுபீட்சத்தையும் வேண்டியே அனைவரும் சம்பிரதாயங்களை செய்கின்றனர்.

கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு உதயமான போது நாம் அனைவரும் மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்தோம். புத்தாண்டு கொண்டாட்டம் ஒருபுறமிருக்க, அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதே மிகப் பெரிய சவாலாக இருந்தது. ஆனால் இப்புத்தாண்டில் அனைவருக்கும் சிறு ஆறுதல் தருகின்ற சூழல் உருவாக்கியுள்ளது.

அடுத்த புத்தாண்டில், இதனை விடவும் சௌபாக்கியத்தையும் செழிப்பையும் ஏற்படுத்திக் கொள்ளவே நாம் முயற்சிக்க வேண்டும். நாம் அனைவரும் ஒருதாய் மக்களாக ஒரே பாதையில் பயணித்தால் அந்த இலக்கு சாத்தியமாகும். அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் என்றும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## மன நிறைவுடன் மட்டற்ற...

அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

" கொவிட் 19 பெருந்தொற்று, அதன்பின்னரான பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் தமிழ், சிங்கள புத்தாண்டை வழமைபோல் கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டது. தற்போது இந்நிலைமை மாறிவருகிறது. பொருளாதார நெருக்கடி தீர்ந்துவருகின்றது. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் புத்தாண்டை மகிழ்வுடன் கொண்டாடக்கூடிய சூழ்நிலை உதயமாகியுள்ளது. எனவே, முன்னோக்கி செல்ல முடியும் எல்லோர் வாழ்விலும் இன்பம் பொங்கும் என்ற நம்பிக்கையுடன் புத்தாண்டில் காலடி வைப்போம்.

ஐக்கியமே ஆக்கம். தமிழ், சிங்கள புத்தாண்டு காலத்தில் மக்கள் மத்தியில் ஒற்றுமையைக் காண முடியும். குடும்ப நிகழ்வாக இருந்தால் என்ன, விளையாட்டு போட்டிகளாக இருந்தால் என்ன அனைத்து மக்களும் கூடி மகிழ்வர். புத்தாண்டு காலப்பகுதியில் மட்டும் அல்லாமல் இலங்கை தாய் மக்களாக நாம் அனைவரும் தொடர்ந்து ஒற்றுமையாக வாழ வேண்டும்.

அதேபோல 'ஒற்றுமை'யின் முக்கியத்துவத்தை கருதி, நாட்டை மீட்டெடுக்க அனைத்துக்கட்சிகளும் இனியாவது ஒன்றுபட வேண்டும். அதற்கான அழைப்பை இந்த நன்நாளில் மீண்டுமொருமுறை விடுக்கின்றேன். அவ்வாறு அனைவரும் இணைந்து செயற்பட்டால், அடுத்த வருடம் எல்லா வழிகளிலும் முன்னேறிய நாடாக நாம் புத்தாண்டை கொண்டாடக்கூடிய சூழ்நிலை நிலவும் என்றார்.

## நல்லிணக்கத்தைக்...

முதற்கட்ட நடவடிக்கையாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சர்வதேச தரத்துக்கமைய பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு முன்பதாக அனைத்து தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு கருத்துக்களைப் பெற்றுக் கொள்வது அந்த அமைச்சரவை உப குழுவின் இரண்டாவது கட்ட நடவடிக்கையாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக் கூறும் நடவடிக்கையின் ஒரு அம்சமாக உண்மையைக் கண்டறியும் பொறிமுறையொன்றை உருவாக்குவது அந்த அமைச்சரவை உப குழுவின் மூன்றாவது கட்ட நடவடிக்கையாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரதான நோக்கமாகும்.

அதற்கிணங்க பிரச்சினைகளுக்கு நீண்ட கால தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்காக ஸ்திர நிலை மற்றும் பொருளாதார மறுசீரமைப்பை சாத்தியப்படுத்திக் கொள்வதும் அவரது நோக்கமாகுமென்றும் அமைச்சர் அலி சப்ரி மேலும் தெரிவித்துள்ளார்.

## இருள் சூழ்ந்த யுகம் நீங்கி...

மேஷ ராசிக்கு சூரியனின் பெயர்ச்சியுடன் ஆரம்பமாகும் சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு இந்நாட்டில் சிங்கள மற்றும் தமிழ் மக்களால் கொண்டாடப்படும் ஒரு சிறந்த கலாசார விழாவாகும்.

பல ஆண்டுகளாக, இலங்கை மக்கள் பல சவால்களுக்கு மத்தியில் புத்தாண்டைக் கொண்டாடினர்.

சிங்கள மற்றும் இந்து புத்தாண்டு சமூக உறவுகளை மேம்படுத்துவதற்கும் பழைய பழக்கவழக்கங்களைத் தொடரவும், ஒருவருக்கொருவர் பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தவும் உதவுகிறது.

சமூகத்தில் நேர்மறை நற்பண்புகளையும் நெறிமுறைகளையும் புகுத்தும் மாபெரும் கலாசார விழாவாக விளங்கும் சிங்கள,இந்து புத்தாண்டு, மனித நல்லிணக்கத்திற்கான கதவுகளைத் திறக்கும் நல்லிணக்கப் பண்டிகையாகவும் அமைந்துள்ளது.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையே பிரிக்க முடியாத பிணைப்பு உள்ளது. இதன் விளைவாக மனிதன் இயற்கைக்கு நன்றி செலுத்தும் வாய்ப்புகளை காண்கிறான். சிங்கள இந்து புத்தாண்டு என்பது நன்றியின் உண்மையான வடிவம் என்றும் பொருள்படும்.

தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை கொண்டிருந்த நம் நாடு, தற்போது கண்ணீர் வடிக்கும் நாடாக மாறியதோடு, புத்தாண்டை குடும்பத்துடன் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் கொண்டாடும் வாய்ப்பு கூட பல ஆண்டுகளாக இல்லாமல் போய்விட்டது.

எமது நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை நிலைமைகளுக்கு அசாதாரணமான சவால்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த இருள் சூழ்ந்த காலம் முடிந்து,நமது நாட்டின் ஒட்டுமொத்த குடிமக்களும் வார்த்தையின் உண்மையான அர்த்தத்தில் வளமான மற்றும் ஒளிமயமான எதிர்காலத்திற்காக உறுதியுடன் அணிதிரள்வதற்கான வலிமையைப் பெற பிரார்த்திக்கிறேன்.

## ரூ. 08 இலட்சம்... (03 ஆம் பக்கத் தொடர்)

சூதாட்டத்தில் ஈடுபட்டவரை கைது செய்ததாகவும் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களையடுத்து அந்த போலி நாணயத் தாள்களை அச்சிட்டதாக கூறப்படும் நபரும் கைதானதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் போலி நாணயத் தாள்களை அச்சிடும் இயந்திரங்கள் மற்றும் கணினிகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபர்களான இருவரும் 37 மற்றும் 38 வயதுடையவர்களென்றும் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முன்னாள் பிரதமர்... (03 ஆம் பக்கத் தொடர்)

அனைவருக்கும் இலவசமாக வாரம் தோறும் அரிசியை பங்கீட்டு முறையில் பெற்று கொடுத்தார். மகாவலி அபிவிருத்தி திட்ட யோசனையை ஆரம்பித்தல் , அனுராதபுரத்தில் பிக்களுக்காக பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தல் (புத்த சிராவக்க தர்ம பீடம்),நான்கு போயா தினங்களுக்கும் விடுமுறை பெற்றுக் கொடுத்தல், விவசாய ராணுவம் ஒன்றை ஆரம்பித்தல் போன்ற தேசிய மத பொருளாதார சேவைகள் பலவற்றை இந்நாட்டிற்கு பங்களிப்பு செய்த தலைவராவார்.

டட்லி சேனாநாயக்க சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான டி .எஸ். சேனாநாயக்கவின் புதல்வராவார்.

## பல்கலை விரிவுரையாளர்களின்...

17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மீண்டும் பல்கலைக்கழகங்களில் கற்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாகவும் அந்த சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னஹெக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்படி தொழிற்சங்க சம்மேளனத்தின் அங்கத்தினர்களுக்கு இடையில் நீண்ட நேர கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றதாகவும் அந்த கலந்துரையாடலின் இறுதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தை கைவிடுவது என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சகலரும் சமமென,...

அடையாளங்களை பாதுகாக்கவும், உரிமைகளை பெற்றிடவும் தேசிய நல்லிணக்க வழி நின்று தொடர்ந்தும் வெற்றி காண்பதே எமது மக்களுக்கு நாம் ஆற்றும் பணியாகும்.

வெற்றுக் கூச்சல்களும், வெறும் வார்த்தைகளும் எமது மக்களுக்கு எந்த விமோசனங்களையும் பெற்றுத் தராது.மாறாக, தீர வேண்டிய பிரச்சினைகளை தீராப் பிரச்சினையாக்கும் அரசியல் கபட நோக்கங்களே நடந்தேறும்.

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாயுமென்பது எமது மதிநுட்ப வழி. இவ்வழி நின்று, நாம் ஆற்றிய மாபெரும் பணிகள் வெற்றியளித்துள்ளன. இதேபோல்,பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கைத்தீவு மீட்சி பெற நாம் எடுத்த அரசியல் நிலைப்பாடும், நிதானமும், இன்று மெல்லென வெற்றி கண்டு வருகிறது. இனிவரும் காலங்களில் எல்லா பிரச்சினைகளுக்கும் நிரந்த தீர்வுண்டு என்ற நம்பிக்கையோடு பிறந்திருக்கும் சித்திரைப்புத்தாண்டை வரவேற்போம்.

கடல் வளம், நில வளம், கல்வி வளம், மற்றும் பொருளாதார வளமென சகல வளங்களையும் பாதுகாக்கவும். 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற சமத்துவ நீதியை உருவாக்கவும்,துயர்களும் தடைகளும் நீங்கி மகிழ்வெழுச்சியுடன் சகல உரிமைகளும் பெற்று எமது மக்கள் நிமிர்ந்தெழவும், பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டில் இன்னமும் வலிமையுடன் உழைப்போம்" என்று அந்த வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சோபகிருது வருடப் பிறப்பு

- **புத்தாடை**

**வெண்ணிற பட்டாடை ஆயினும் அல்லது மஞ்சள் கரை கொண்ட வெண்ணிற ஆடை அணிவது நல்லது.**

- **புது வருட ஆபரணம்**

**திருக் கணித பஞ்சாங்கத்தின் படி வைரம் பதிக்கப்பட்ட ஆபரணம்.**

- **கைவிசேடம்**

**திருக்கணித பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04.2023) சனிக்கிழமை காலை 06.45 முதல் 07.30 வரை. சித்திரை 2 (15.4.2023) காலை 08.00 மணியில் இருந்து 8.55 வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு காலை 08.00 மணி முதல் 09.30 வரை. சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு பகல் 12.10 முதல் 1.15 வரை.**

- **புதுக்கணக்கு**

**திருக்கணிதத்தின் படி சித்திரை 13 (26.04.2023) புதன்கிழமை காலை 07.32 முதல் 09.05 வரைசித்திரை 20 (03.05. 2023) புதன் காலை 07.30 முதல் 08.40 வரை சித்திரை 22 (05.05.2023) வெள்ளிக்கிழமை காலை 07.15 முதல் 08. 28 வரை**




# IMF தொடர்பில் எதிர்க்கட்சிகள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றன

## விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

(மாத்தளை சுழற்சி, அக்குறணை குறூப் நிருபர்கள்)

எதிர்க்கட்சித் தலைவரின் பேச்சுக்களைக் கேட்கும் போது அது நகைச்சுவை நாடகத்தைப் பார்ப்பது போல் உள்ளது, சர்வதேச நாணய நிதியம் பற்றி அவர் முதலைக் கண்ணீர் வடிக்கின்றார் என்று விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்க தெரிவித்தார்.

இரத்தோட்டைப் பகுதியில் உள்ள பொல்வத்த கந்த பெருந்தோட்டத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.வசதி குறைந்த குடும்பங்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் இலவச அரிசியை கையளிக்கும் வைபவத்திலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது கடந்த வருடம் எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆட்சியைப் பொறுப்பேற்கக் கூறிய போது பல்வேறு சாக்குப் போக்குகளைக் கூறி ஒதுங்கிய அவர் இப்போது வேறுவிதமாகப் பேசுகிறார்.

```அதே நேரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொண்ட தியாகம் வரலாற்று ரீதியில் முக்கியமானதமாகும்.

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் நாம் நலன்புரி நடவடிக்கைகளை கைவிடவில்லை என்றார்.



# நீர்ப்போசன வனப்பகுதிக்கு தீ வைப்பு

(ஹற்றன் விசேட நிருபர்)

திம்புள்ளை பத்தனை பொலிஸ் பிரிவிக்குட்பட்ட கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் நேத்ரா பிளேஸ் பகுதிக்கு மேல் அமைந்துள்ள நீர்ப்போசன வனப்பிரதேசத்திற்கு இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது.

தீ பரவலால் 10 ஏக்கர் வனப்பகுதி எரிந்து நாசமாகியுள்ளது.

குறித்த தீ பரவலையடுத்து தொலைபேசி வயர்களுக்கும் மின் வயர்களுக்கும் மற்றும் குடிநீர்க் குழாய்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இப்பகுதியில் இருந்து சாந்திபுரம், சமாதானபுரம், நேத்ரா பிளேஸ், கொட்டகலை, கொமர்ஷல் உள்ளிட்ட பகுதியில் வாழும் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீரினைப் பெற்று வருகின்றனர். இதனால் எதிர்காலத்தில் குடிநீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக பிரதேசவாசிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வனப்பகுதியில் எமது நாட்டுக்கு உரித்தான பறவையினங்கள், மான், மரை, பன்றி, முயல் உள்ளிட்ட பிராணிகளும் வாழ்ந்து வருகின்றன. இந்த தீ காரணமாக இவைகளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டு உயிர்ச் சேதங்களும் ஏற்பட்டிருக்கலாம் என அச்சம் தெரிவிக்கின்றனர்.

வறட்சியின் போது மக்கள் சிந்திக்காமல் செய்யும் விஷமத்தனமான செயல்கள் காரணமாக உயிரினங்களும் பொதுமக்களும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்படுகின்றனர்.

இராணுவம், திம்புள்ள பத்தனை பொலிஸாரும் இணைந்து தீயை கட்டுப்படுத்தியுள்ளனர்.





# தேயிலையின் விலை அதிகரித்தால் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் பங்கு இலாபமும் அதிகரிக்கும்

## ரொசான் ராஜதுரை

கொட்டகலை தினகரன் நிருபர்

தேயிலையின் விலை அதிகரித்தால் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் பங்கு இலாபமும் அதிகரிக்கும்.சில தோட்டங்களில் தொழிலாளர் சிலருக்கு கடந்த வருட பங்கு இலாபம் ஒரு இலட்சம் வரையில் கிடைக்கப்பெற்றுள்ளது என்று களனிவெளி, தலவாக்கலை மற்றும் ஹொரணை ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களின் முகாமைத்துவ பணிப்பாளர் ரொசான் ராஜதுரை தெரிவித்தார்.



பொது நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளிக்கு போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்துரையாற்றி அவர்,..

இலங்கையில் வருடம் முழுவதும் 2000 மில்லி மீற்றர் வரை மழை வீழ்ச்சி உள்ள ஒரு நாடாகும்.தேயிலை உற்பத்தியின் போது தேயிலை தளிரின் ஈரப்பதனை இல்லாமல் செய்வதற்கு விறகு மற்றும் மின்சார பயன்பாடு அதிகம் தேவைப்படுகின்றது. அதனால் மின்சாரத்தின் தேவை தினமும் அதிகளவில் தேவைப்படும் ஒரு உற்பத்தித் துறையாகவே தேயிலை உற்பத்தி காணப்படுகின்றது. இந்நிலையில் மின் மற்றும் எரிப்பொருட்களின் விலை அதிகரிப்பானது தேயிலை உற்பத்தியில் மூன்று மடங்குக்கு மேல் உற்பத்தி செலவை அதிகரிக்கச் செய்துள்ளது.

இந்நிலையில் 2018ஆம் ஆண்டு வரை மிகவும் நட்டத்தில் இயங்கி வந்த இந்த தொழிற்துறையானது கடந்த ஆண்டு ஓரளவு இலாபத்தை பெற்றுள்ளது.

இலாபம் கிடைத்தால் மக்களுக்கும் எமக்கு நன்மை கிட்டும்.விலை குறைந்தால் பங்கு இலாபமும் குறைவடையும் என்று தெரிவித்தார்.

# ஆற்றில் நீராடச் சென்ற இரு மாணவர்கள் காணாமல் போயுள்ளனர்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

பலாங்கொடை மஸ்ஸென்ன என்ற இடத்தில் கிரிக்கெட் விளையாடி விட்டு ஆற்றில் நீராடச் சென்ற இரு பாடசாலை மாணவர்கள் காணாமல் போயுள்ளனர்.

நான்கு மாணவர்கள் வளவை ஆற்றில் நீராட சென்றுள்ளனர்.

இவர்களில் இரு மாணவர்கள் ஆற்றில் அடித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பலாங்கொடை இந்துக் கல்லூரியில் தரம் 8 பயிலும் மாணவன் அனஷ் மற்றும் பலாங்கொடை ஆனந்தமைத்திரிய தேசிய பாடசாலை உயர்தர மாணவன் பிரவீன் ஆகியோரே காணாமல் போயுள்ளனர்.

இவர்களைத் தேடி நேற்று பிரதேச மக்கள், இளைஞர்கள் கடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போதிலும் அவர்களை கண்டெடுக்க முடியவில்லை என பொலிசார் தெரிவித்தனர்.

# ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொள்ள முழு நாளும் தோட்டத்தில் வேலை செய்யும் நிலை

## சோ.ஸ்ரீதரன்

(கொட்டகலை தினகரன் நிருபர்)

நாள் சம்பளமாக 1000 ரூபாவை பெறுவதற்கு முழு நாளும் தோட்டத்தில் வேலை செய்ய வேண்டிய நிலைமை எமது பெருந்தோட்ட மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் நிதிச் செயலாளர் சோ.ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.



பொகவந்தலாவையில் மக்கள் சந்திப்பு ஒன்றில் அவர் உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். மேலும் எமது உடன் பிறப்புகளான எமது தொழிலாளர்கள் தினமும் பெரும் போராட்டத்தின் மத்தியில் அவர்களின் வாழ்க்கையை கொண்டு செல்கின்றனர்.

தினமும் உணவு, பிள்ளைகளின் கல்வி, மருத்துவம் என பெரும் செலவுகளை ஈடுகட்ட முடியாது பெரும் சிரமத்தின் மத்தியில் வாழ்கின்றனர் என்றும் தெரிவித்தார்.

ஊடகங்களில் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும் இங்கு உள்ள வியாபார நிலையங்களில் பொருட்களின் விலைகள் அதிகளவில் காணப்படுகின்றது. விலை குறைக்கப்பட்டது சதோசவில் மட்டுமே என்று தெரிவிக்கப்படுகின்றது, இந்நிலையில் விலை குறைக்கப்பட்ட பொருட்களை பெற்றுக் கொள்ள முடியாத மக்களாகவே நாம் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

ரூபா 1500 விற்கு காணப்பட்ட கேஸ் விலையை ரூபா 5000 த்திற்கு உயர்த்தி மீண்டும் ரூபா 1000 குறைப்பதில் எவ்வித பிரயோசனமும் இல்லை எமது மக்களால் அந்த கேஸை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளனர் என்றும் தெரிவித்தார்.


ஆரோக்கியமான
மகிழ்ச்சியான
நீண்டகால வாழ்விற்கான
'சோபகிருது' வருடப்பிறப்பின் சுபகருமங்கள்

புதுவருட பிறப்பு

புதிய 'சோபகிருது' வருடமானது எதிர்வரும் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணி 03 நிமிடத்தில், அபரபக்க நவமித் திதியில், திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில் சாத்தியம் நாமயோகத்தில், கரசக் கரணத்தில், கடக லக்கிணத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரன் காலவோரையில், செவ்வாய் சூக்குமவோரையில், சாத்விக குணவேளையில் நட்சத்திர பக்ஷியாகிய மயில் சாவுத் தொழிலும், சூக்கும பக்ஷி அரசத் தொழிலும் செய்யுங் காலத்தில் பிறக்கின்றது.

விஷு புண்ணிய காலம்

14.04.2023 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 மணி தொடக்கம் முன்னிரவு 6.03 மணி வரையும் விஷு புண்ணியகாலமாகும்.
இப்புண்ணியகாலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்து நீர் தேய்த்து சிரசில் கொன்றை இலையும், காலில் புன்கிலையும் வைத்து ஸ்நானம் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளைக்கரையமைந்த புதியபட்டாடையாயினுந் தரித்து முத்து, வைரம் இளைத்த ஆபரணம் அணிந்து, சுகந்தசந்தனம் பூசி, நறு மலர் சூடி தத்தம் வீடுகளில் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து, விக்னேசுவரர் முதலிய குலதெய்வ வழிபாடு செய்து, இயன்ற தானதருமங்களியற்றி, குரு பெற்றார் முதலிய பெரியோரை வணங்கி அவர்களின் ஆசிபெற்று, உற்றார் நண்பர்களுடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி சேர்த்தருந்தி, தாம்பூலந்தரித்து, கண்ணாடி தீபம் நிறைகுடம் தேவதைகளின் திருவுருவம் திருமுறைப்புத்தகம் தாமரை முதலிய பூக்கள், பழவகை, மஞ்சள், குங்குமம், சந்தனம், வெற்றிலை, பாக்கு முதலிய மங்கலப் பொருட்களைத் தரிசித்து புதிய வருஷ பலன்களை வாசித்தும் கேட்டும் நன்குணர்ந்து, தூயதவத்தாற் பெற்ற மானிடப் பிறவியில் இனிது சிந்தித்து மங்களகரமாக வாழக் கடவர்.

கைவிசேட சுபநேரம்

2023.04.15 சனிக்கிழமை காலை 7.52 மணி தொடக்கம் மு.ப. 9.00 மணிவரை
2023.04.16 ஞாயிற்றுக்கிழமை காலை 6.39 மணி தொடக்கம் மு.ப. 8.05 மணிவரை

சங்கிரம தோஷநட்சத்திரங்கள்

ரோகிணி, மிருக சீரிடம் 3ம், 4ம் கால்கள், திருவாதிரை புனர்பூசம் 1ம், 2ம், 3ம் கால்கள், அத்தம், உத்தராடம் 2ம், 3ம், 4ம் கால்கள் திருவோணம், அவிட்டம் 1ம், 2ம் கால்கள் இவற்றிற் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானஞ்செய்து இயன்ற தான தருமங்களைச் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக்கடவர்.

பாதுகாப்பு சுபநேரம்

உங்கள் பற்றியும், உங்கள் அன்பிற்குரியவர்களின் எதிர்காலம் குறித்தும் எந்தளவு அக்கறை கொண்டுள்ளீர்கள்?
மலரும் புத்தாண்டில் உங்களினதும் உங்கள் அன்பிற்குரியவர்களினதும் பாதுகாப்பை உறுதிசெய்யும் சுபநேரம் எம்மிடமிருந்து.
ஆரோக்கியமான, மகிழ்ச்சியான, நீண்டகால வாழ்விற்கு இன்று மலரும் பாதுகாப்பு சுபநேரத்தை AIA இன்ஷூரன்ஸுடன் ஆரம்பிப்போம்.

QR குறியீட்டை ஸ்கேன் செய்து
இன்று பிறக்கும் பாதுகாப்பு சுபநேரத்தில்
உங்கள் எதிர்காலத்தை பாதுகாக்க.
AIA இன்ஷூரன்ஸினை அழையுங்கள் 0112 310310.

தகவல்: வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம் ஆனவையாகும்.

HEALTHIER, LONGER, BETTER LIVES
```

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 21



**குறள் தரும் சிந்தனை**

அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொருது
உட்பகை உற்ற குடி

*அரத்தினால் தேய்க்கப்படும் இரும்பின் வடிவமும் வலிமையும் குறைவதைப் போல, உட்பகை உண்டான குலத்தின் வலிமையும் தேய்ந்து குறைந்து விடும்.*

## நாட்டின் ஐக்கியத்துக்கான புத்தாண்டாக அமையட்டும்!

தமிழ்_ சிங்களப் புத்தாண்டு நாளை பிறக்கிறது. இது இலங்கையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த புத்தாண்டுகளில் ஒன்றாகும். இந்நாட்டில் வாழும் தமிழ்(இந்து) மற்றும் பௌத்த மக்களுக்குரிய புத்தாண்டாக இது விளங்குகிறது. இப்பண்டிகையைத் தமிழ், சிங்கள மக்கள் தத்தம் சமய, கலாசார விழுமியங்களுடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடக் கூடிய பாரம்பரியத்தைக் கொண்டுள்ளனர்.

இது தமிழ், சிங்கள மக்களின் புத்தாண்டு என்றாலும், இந்நாட்டில் வாழும் ஏனைய இன மக்களும் இப்பண்டிகைகளின் விடுமுறைகளை அனுபவிக்கக் கூடியவர்களாகவும் பண்டிகையையொட்டிய கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கக் கூடியவர்களாகவும் உள்ளனர்.

தமிழ், சிங்களப் புத்தாண்டு கொண்டாடப்படும் இம்மாதத்தில் இந்நாட்டில் வாழும் ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்களது பண்டிகைகளும் இம்மாதத்தில் நீண்ட நாட்களுக்கு பின்னர் அமைவுற்று இருப்பது விஷேட அம்சம். அதாவது உயிர்த்த ஞாயிறு பண்டிகை, ரமழான் நோன்பு பண்டிகை ஆகியனவே அப்பண்டிகைக ளாகும். அதானல் இம்முறை ஏப்ரல் மாதம் இந்நாட்டின் பண்டிகைகளின் மாதமாக விளங்குகிறது என்று குறிப்பிடலாம்.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்நாட்டு மக்கள் தத்தம் பண்டிகைகளை அச்சம், பீதி இல்லா சூழலில் கொண்டாடக்கூடிய வாய்ப்பு இம்முறை கிடைக்கப் பெற்றுள்ளது. கடந்த நான்கு வருடங்களாக இவ்வாறான சூழலோ, வாய்ப்போ கிடைக்கப் பெறவில்லை.

2019 ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், 2020 ஆம், 2021 ஆம் ஆண்டுகளில் கொவிட் 19 பெருந்தொற்றின் அச்சுறுத்தல், 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு முகம்கொடுத்த மிக மோசமான பொருளாதார நெருக்கடி என்பன இந்நாட்டு மக்களின் பண்டிகைகளுக்கு பெரும் இடையூறாகவும் தடையாகவும் அமைந்திருந்தன. ஆனால் அவ்வாறான துரதிஷ்டமான நிலைமை அற்ற சூழல் இப்போது கிடைக்கப் பெற்றுள்ளது.

அதனை அடிப்படையாகக் கொண்டு இம்முறை தத்தம் பண்டிகைகளை சிறப்பாகவும் விமரிசையாகவும் கொண்டாடுவதில் மக்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டுள்ளனர். பண்டிகைக்காகத் தயாராவது முதல் அதற்குத் தேவையான உடுதுணிகள் உள்ளிட்ட பொருட்களை கொள்வனவு செய்வதிலும் இப்பண்டிகையைத் தம் குடும்பம் மற்றும் உறவினர்களுடன் கொண்டாடுவதற்கு ஆயத்தமாவதிலும் மக்கள் அதிக அக்கறை காட்டுவதையும் அவதானிக்க முடிகிறது.

மேலும் இப்பண்டிகைகளின் நிமித்தம் பெருநாள் விளையாட்டுப் போட்டிகள், கலை, கலாசார நிகழ்ச்சிகள் என்பனவும் கிராம மட்டங்களில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழ், சிங்கள பண்டிகையின் விளையாட்டுப் போட்டிகளும் கலைகலாசார நிகழ்ச்சிகளும் தற்போது ஆரம்பமாகி உள்ளன.

அதேநேரம் பண்டிகைக் காலம் என்றதும் வாண வேடிக்கையும் பட்டாசு கொளுத்துவதும் வழமையானவை. ஆனால் இச்சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் விபத்துகளுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களும் மிக அதிகம். அதனால் அவ்வாறான சம்பவங்களுக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்வதிலும் கூடுதல் கவனம் செலுத்துமாறு பொலிஸாரும் அரசாங்க வைத்தியசாலை வைத்தியர்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் எல்லா மக்களதும் பண்டிகைகளை உள்ளடக்கிய மாதமாக இம்மாதம் அமைந்திருப்பது எல்லோரும் ஒற்றுமையாகவும் நல்லிணக்கத்துடனும் புரிந்துணர்வுடனும் வாழ்வதன் அவசியத்தையும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

கடந்த வருடம் முழுநாடும் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்று வந்து கொண்டிருக்கும் சூழலில் இந்நாட்டு மக்களின் பண்டிகைகளை உள்ளடக்கியதாக இம்மாதம் அமைந்திருப்பதன் ஊடான யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியம்.

நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட நாடாக இருந்த போதிலும், பொருளாதார ரீதியில் எவ்வித அசௌகரியங்களுக்கும் முகம்கொடுக்காதபடி வாழ்வதற்குத் தேவையான அத்தனை வளங்களும் சீதோஷண நிலையும் இங்கு காணப்படவே செய்கின்றன. அப்படியிருந்தும் கடந்த வருடம் மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு நாடும் மக்களும் முகம் கொடுத்தனர். ஏனெனில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகளிலும் வேலைத்திட்டங்களிலும் காணப்பட்ட பலவீனங்களும் பிழையான போக்குகளும்தான் காரணம் என்பது தான் புத்திஜீவிகளின் கருத்தாகும்.

ஆகவே பண்டிகைகளின் மாதமாக விளங்கும் இம்மாதத்தை அனைத்து மக்களின் ஒற்றுமை, புரிந்துணர்வுக்கான ஆரம்பமாக அனைவரும் கொள்வோம். தமிழ், சிங்கள மக்களின் ஒற்றுமைப் பண்டிகையான இப்புத்தாண்டு இந்நாட்டின் சுபீட்சம் மறுமலர்ச்சிக்கு வித்திடும் தளமாகவும் அமைந்திட வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

editor.tkn@lakehouse.lk

# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்

## அனைவர் வாழ்விலும் ஆனந்தம், அமைதி பொங்க சோபகிருது சித்திரைப் புத்தாண்டு வழிவகுக்கட்டும்!

சித்திரை மகள் எம்மத்தியில் தடம் பதிக்கும் நாள் ஒரு பொன்னாள். புத்துணர்வும் பூரிப்பும், புதுப்புது சிந்தனைகளும், எல்லோர் மனதிலும் பூத்துக்குலுங்கும் நன்னாள். ஆண்டுதோறும், மாறி மாறி வரும் பருவகாலங்களுள், சித்திரை வசந்தம் எல்லோராலும் வரவேற்கப்படுதல் யதார்த்தம்.

இவ்வாண்டு சித்திரை மாதம் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை( நாளை) சோபகிருது என்னும் நாமத்தோடு உதயமாகிறது. திருவோண நட்சத்திரத்தில் கடக இலக்கினத்தில் புத்தாண்டு உதயமாகின்றது. அன்றைய தினம் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி காலை 10 மணியிலிருந்து, பிற்பகல் 6.00 மணிவரை விஷுபுண்ணிய காலமாக அமைகிறது.



இப்புண்ணிய காலத்தில் யாவரும் மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து சுகந்த சந்தனம் பூசி, நறுமலர்சூடி, தத்தம் இல்லங்களில் பொங்கல் பொங்கிப் படைத்து தெய்வ வழிபாடு செய்ய வேண்டும். இஃது வழமையுமாகும்.



ஆலய தரிசனமும் இந்நாளில் மிக அவசியமானதாகும். தொடர்ந்து குரு, பெற்றோர், மூத்தோர், ஆகியோரை வணங்கி நல்லாசிகளையும் பெற்றாக வேண்டும். இத்தினத்தில் தானதருமங்கள் செய்தல் மிக உகந்த செயலாகும். அத்தோடு மங்கலப் பொருட்களாகிய கண்ணாடி, குங்குமம், மஞ்சள் போன்ற மங்கலப் பொருட்களை கண்ணாரத் தரிசித்தலும் உகந்த செயலாகும்.

வருடப்பிறப்பன்று மிக முக்கியத்துவம் பெறும் மருத்துநீரின் சிறப்பை நோக்குவோம். தாமரை, துளசி, தாழம்பூ, மாதுளம்பூ, வில்வம், பீர்க்கு, விஷ்ணுகிராந்தி, செங்கழுநீர், அறுகு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பிலி, சுக்கு ஆகியவற்றை சுத்தமான நீரில் இட்டுக்காய்ச்சி எடுப்பதே மருத்துநீர். இதனை மருந்து போன்றது என்றும் கூறலாம். இந்த மருத்து நீர் ஸ்னானம் வருடப்பிறப்பன்று முக்கியம் வாய்ந்தது.

மேலும் இப்புதுவருடத்திற்குரிய நிறம் வெண்ணிறமாகும். எனவே அன்றைய தினம் நாம் அணியும் ஆடை வெண்ணிறமாக அமைதல் முக்கியம் வாய்ந்தது. மருத்துநீர் ஸ்னானமும் வருடப்பிறப்பன்று முக்கியம் வாய்ந்தது. அதிலும் குறிப்பிட்ட சில நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தோஷமிருப்பதால் அவர்கள் தவறாது மருத்துநீர் ஸ்னானம் செய்தல் வேண்டத்தக்கது.

பஞ்சாங்த்தின்படி தோஷமுள்ள நட்சத்திரங்களாவன: ரோகினி, மிருகசீரிடம் 2 ஆம், 3 ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம், 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம், அத்தம், உத்திராடாடம் 2 ஆம் 3 ஆம்,4 ஆம் பாதம், திருவோணம்,அவிட்டம் 1 ஆம் 2 ஆம் பாதம் என்பனவாம்.



பொங்கலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். வீட்டு முற்றத்தில் ஓரிடத்தை தேர்ந்தெடுத்து சுத்தப்படுத்திய பின், அவ்விடத்தை சாணத்தால் மெழுகி அதில் அழகாக மாக்கோலமிட்டு, மேலே சிறுபந்தல் ஒன்று அமைத்து, அதன்கண் மாவிலை தோரணம் கட்டி, பிள்ளையார் பிடித்து வைத்து, கும்பம் வைத்து குத்துவிளக்கேற்றி, புத்தடுப்பில் புதுப்பானையை வைத்து, அதனுள் புத்தரிசி, பால், சர்க்கரை, முந்திரிப் பருப்பு, முந்திரி வற்றல், பயறு, ஏலரிசி ஆகியவற்றை இட்டு பொங்கல் பொங்கி, சூரிய பகவானுக்கும் மற்றைய தெய்வங்களுக்கும், தலைவாழையிலையில் மூன்று படையலாக படைத்து தேவாரம் ஓதி, கற்பூரம் ஆராதனை செய்து வழிபட வேண்டும். அதன் பின்னர் ஏழைகளுக்கும், சுற்றத்தார், அயலார் போன்றோர்க்கும் பொங்கல் வழங்கி பின் நாமும் குடும்பத்தோடு ஒன்றாக அமர்ந்து



இனிய பொங்கலைச் சுவைத்து மகிழலாம். இந்நேரத்தில் சிறு பிள்ளைகள் பட்டாசு போன்றவற்ற கொளுத்தி மகிழ்வார்கள்.

நாளை பிறக்கவிருக்கும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு வாசகர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த, உளம் கனிந்த சித்திரை பொங்கல் வாழ்த்துகள் உரித்தாகட்டும்!



கலாபூஷணம் திருமதி
**இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு**
எம்.ஏ (ஓய்வுநிலை அதிபர்)

## இனமத பேதங்களின்றி அனைத்து மக்களையும் நேசித்து வாழ்வோம்!

சோபகிருது சித்திரைப் புத்தாண்டு நாளை உதயமாகிறது. தமிழரின் 60 வருட சுற்றுவட்டத்தில் 37 ஆவது வருடம் சுபோகிருது ஆகும். சுபோகிருது என்றால் தமிழில் 'மங்கலம்' என்று பொருள். அத்தகைய மங்கலமான புதிய வருடத்தை மங்கலமாக வரவேற்பது அவசியம்.

தமிழர்களும் சிங்கள மக்களும் கொண்டாடும் சித்திரைப் புத்தாண்டுக்கு அறிவியல் சார்ந்த விளக்கம் உள்ளது.

சூரியன் மிகத்துல்லியமாக கிழக்கில் உதிக்கும் நாள்தான் சித்திரை முதலாம் திகதி. எனவேதான்

தமிழர்கள் சித்திரை முதலாம் திகதியை புத்தாண்டாகக் கொண்டாடினர்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் துல்லியமாக கணித்துக் கூறிய வானியல் சாஸ்திரம்

இன்றும் கடைப்பிடிக்கப்படுகின்றது. இந்துசமயம் சொல்லி வைத்த விடயங்களில் நமக்குத்

தெரியாத உண்மைகள் பல உள்ளன. இன்றைய நவீன விஞ்ஞானக் கண்டுபிடிப்பு ஆராய்ச்சிகள் எல்லாம் வருவதற்கு முன்பே பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழர்கள் சந்திர சூரிய கிரகணங்களைக் கணித்து பஞ்சாங்கத்தில் பொறித்திருந்தார்கள்.



### சோபகிருது என்றால் மங்கலம்

### தமிழர்களின் அறிவியல் சார்ந்த சித்திரைப் புத்தாண்டு!

அதுமட்டுமின்றி, சந்திர சூரிய நகர்வுகள், நல்லது கெட்டது, நாள் கோள் பலன்கள் அனைத்தும் அன்றே கணிக்கப்பட்டன. அத்தகைய அறிவுபூர்வமான சமுதாயமாக தமிழர் சமுதாயம் அன்றே விளங்கியது.

மதம் சார்ந்த பண்டிகைகளுக்கு பின்புலமாக நம் முன்னோர்கள் மிகப்பெரிய அறிவியலை வைத்திருந்தார்கள்.



சூரியன் ஒரு குறிப்பிட்ட நாளில் மட்டுமே சரியாக கிழக்கே உதிக்கும்.

பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக வடகிழக்கு நோக்கி நகர்ந்து, ஒரு குறிப்பிட்ட புள்ளியில் மறுபடியும் தெற்கு நோக்கித் திரும்பும்.

அதன் பின்னர் மறுபடியும் ஒரு நாள் கிழக்கே உதிக்கும். பின்னர் தென்கிழக்கு நோக்கி நகரும்.

இவ்வாறு சரியாக கிழக்கில் ஆரம்பித்து வடகிழக்கு, தென்கிழக்கு என்று சென்ற பின்னர் மறுபடியும் கிழக்குக்கு வருவதற்கு ஆகின்ற நேரம் சரியாக ஒரு வருடம் ஆகும்.

சூரியன் தன் பயணத்தை கிழக்கில் ஆரம்பிக்கும் நாள் தான் சித்திரை முதலாம் திகதி. அதுவே தமிழ்ப் புத்தாண்டு.

அதன் பின்னர் சரியாக வடகிழக்கு புள்ளிதான் ஆடி 1. அதுவே ஆடிப் பிறப்பு.



மறுபடியும் கிழக்குக்கு வரும்போது ஐப்பசி 1. தீபாவளி

மீண்டும் சரியாக தென்கிழக்கு... இப்போது தை 1. அதுவே பொங்கல்.

இந்த வானியல் மாற்றங்களையும், அதனைச் சார்ந்த பருவகால மாற்றங்களையும் நன்கு உணர்ந்து இருந்த நம் முன்னோர், இவற்றை அனைவரும் அறியும் வகையில்தான் திருவிழாக்களாகக் கொண்டாடினார்கள்.

சித்திரைப் புத்தாண்டு, ஆடி 18 ஆடிப் பிறப்பு, ஐப்பசிஅமாவாசை தீபாவளி. தை 1 பொங்கல்.

அவ்வாறான சிறப்பான சித்திரைப் புத்தாண்டு நாளை பிறக்கின்றது. அதுவும் 60 வருட சுழற்சியில் 37 ஆவது வருடமான மங்கலம் என்னும் சோபகிருது புதிய வருடத்தை வரவேற்கத் தயாராகிறோம்.


இத்தகைய அறிவியல் சார்ந்த விடயத்தை நமது அடுத்த தலைமுறைக்கு நமது பாரம்பரியத்தை வெறும் சடங்காக மட்டும் அல்லாமல் அதில் மறைந்துள்ள அறிவியலையும் கொண்டு சேர்க்க வேண்டும்.

கடந்துவந்த கடினமான 2022 ஆம் ஆண்டிலே இடம்பெற்ற நல்லதையும் தீயதையும் எண்ணிப் பார்த்து நமது குறைநிறைகளை நிவர்த்தி செய்து, மலர்ந்துள்ள புதிய ஆண்டை வரவேற்பதோடு, கடந்த ஆண்டு முழுவதும் நமக்கு உதவிய கடவுளுக்கும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளையும் கூறிக்கொண்டு புத்தாண்டை வரவேற்போம்.

மலர்ந்துள்ள இந்த ஆண்டு புதிய எண்ணங்கள், புதிய முயற்சிகள், நல்ல சிந்தனைகள் என்பனவற்றால் ஒரு உயிரூட்டமுள்ள விசேட ஆண்டாக நமது நாட்டு மக்கள் அனைவருக்கும் அமைந்திடவும், இலங்கை முழுவதும் பிரகாசமான சந்தோசம் நிறைந்த சுபிட்சமான வாழ்வு மக்களுக்கு கிடைத்திடவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போம்.

நம்மால் முடிந்தவரை எல்லோரையும் நேசித்து இன, மத, சாதி பேதமின்றி எல்லோருக்கும் உதவி செய்வோம். வாழும் காலம் முழுவதும் எல்லா மக்களையும் நேசிப்போம்.

**வி.ரி.சகாதேவராஜா...**
(காரைதீவு குறூப் நிருபர்)



# சித்திரைப் புத்தாண்டு சிறப்பு மலர்

# தமிழ்–சிங்கள இனங்களின் பண்டைக்கால ஐக்கிய அடையாளம் சித்திரைப் புத்தாண்டு



தமிழ், சிங்கள புத்தாண்டான சோபகிருது வருடம் நாளை பிறக்கின்றது. சித்திரைப் புத்தாண்டுப் பிறப்பானது தமிழர்களின் காலக் கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டது.

ஒவ்வொருவரதும் வாழ்வோடு ஒட்டிய காலக்கணிப்பின்படி வாழ வேண்டிய வழிகளை ஆண்டு தோறும் வகைப்படுத்தி, வழியமைத்துக் கொள்ள அடியெடுத்து வைக்கும் வருடத்தின் முதல் நாளாக சித்திரைப் புத்தாண்டு தினம் அமைகின்றது.

ஒவ்வொருவரதும் வாழ்க்கை நிலையை நிர்ணயிப்பது காலமாகும். காலத்தை கணித்துக் கொண்டு தம் செயலை நேரத்தில் ஆற்றுவது வாழ்வின் வெற்றிக்கு வழி செய்யும். காலத்தின் பெறுமதியைப் பலரும் வியந்து கூறியுள்ளது போன்று, அதை அனுசரித்து நடக்க வேண்டியதையும் வலியுறுத்தியுள்ளனர்.

காலத்தைக் கணிப்பிடும் பண்டுதொட்டு வரும் பண்பட்ட பெருமையை வெளிப்படுத்தும் புதுவருடப் பிறப்பில் தொக்கி நிற்கும் சிறப்புகளை நினைவிலிருத்தி பெருமையடைவோம்.

தமிழர்கள் உலக இயக்கத்தை, இயற்கையை அளவிட்டு வைத்துள்ளார்கள். அதில் பொதிந்துள்ள உண்மைகள் நவீன விஞ்ஞான ஆய்வுகளையும் விஞ்சியவை.

ஆம், வருடத்தில் பன்னிரண்டு மாதங்கள் என்பது போன்று வருடத்தில் முந்நூற்று அறுபத்தைந்தே



கால் நாட்களும், வாரமொன்றில் ஏழு நாட்களும் நாளொன்றில் இருபத்துநான்கு மணித்தியாலங்களும் வரையறை செய்யப்பட்டுள்ளன. அதே போல் ஒரு மணித்தியாலத்தில் அறுபது நிமிடங்களும், ஒரு நிமிடத்தில் அறுபது வினாடிகளும் உள்ளன.

பொதுவான இக்கணிப்பீடுகளுக்கும் அப்பால் காலக்கணிப்பீடு ஆழமாகவும், விரிந்தும், பரந்தும் உள்ளது. அந்த அளவீட்டின் அடிப்படையில் அமைந்ததே சித்திரைப் புத்தாண்டு தினம்.

சூரியனை முதன்மையாகக் கொண்ட சிறப்புத் தினங்களாக தைப்பொங்கல் தினமும், சித்திரைப் புத்தாண்டு தினமும் அமைகின்றன. இயற்கையின் இயக்கம் சூரியனை அடிப்படையாகக் கொண்டது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. காலநிலை மாற்றங்கள், இயற்கையின் செயற்பாடுகள் அனைத்தும் சூரியனைச் சார்ந்தவையே.

தமிழ் இந்து வருடங்கள் அறுபது ஆகும். அறுபது வருடங்களில் முதலாவது வருடம் 'பிரபவ' என்ற பெயர் கொண்டதாக இருப்பதுடன் அறுபதாவது வருடம் 'அட்சய' என்று குறிப்பிடப்படுகின்றது.

இந்த அறுபது வருடங்களும் சுழற்சி முறையில் பெயர் பெறுகின்றன. இதன் அடிப்படையில் இந்த சித்திரைப் புத்தாண்டன்று பிறக்கும் வருடம் சோபகிருது வருடம் என்று பெயர் பெறுகின்றது.



இந்துக்களின் காலக்கணிப்பீட்டின்படி சித்திரைப் புத்தாண்டு தினமே புதுவருடப் பிறப்பாக ஆண்டின் முதல் மாதமாக அமைகின்றது. நடைமுறையிலுள்ள ஆங்கில நாட்காட்டிகளுக்கு மாற்றமாக குறித்த ஆங்கில மாதத்தின் இடைப்பட்ட மத்திய நாளிலேயே தமிழ் மாதம் பிறக்கின்றது.

மலரும் 'சோபகிருது' வருடம் ஆண்டின் சுழற்சியின்படி 37 ஆவது வருடமாகும். சூரியனின் ராசிகளுக்கிடையேயான பெயர்ச்சியின்படியாக கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்து பஞ்சாங்கத்தின்படி ராசிகள் பன்னிரண்டும், நட்சத்திரங்கள் இருபத்தேழும் இடம்பெறுகின்றன. ராசிகளில் முதலாவதாக மேடமும் பன்னிரண்டாவதாக மீனமும் அமைகின்றன.

அதேபோல் நட்சத்திரங்கள் இருபத்தேழில் அச்சுவினி முதலாவதாகவும் இறுதியானது ரேவதியாகவும் அமைகின்றன.

புதுவருட தினத்தில் மீன ராசியிலிருந்து மேட ராசிக்கு சூரியன் பெயர்ச்சியடைகின்றது. அவ்வாறு பெயர்ச்சியடையும் நாளையே நாம் தமிழ் இந்து புதுவருட தினமாக, வருடத்தின் முதல் நாளாக கொள்கின்றோம், கொண்டாடுகின்றோம். மலரும் புத்தாண்டில் வாழ்வில் வளங்கள் பெருக வேண்டும், நிம்மதி நிலவ வேண்டும். உலகிலே அமைதி நிலவி, நோய்நொடிகளற்ற வாழ்வு மலர்ந்து நிலைபெற வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன் பாரம்பரிய சம்பிரதாயங்களை, சடங்குகளைக் கடைப்பிடித்து எதிர்காலத்தை எதிர்கொள்வோம்.

இலங்கைத் திருநாட்டில் இரு மதத்தினருக்கு மட்டுமல்ல, இரு இனத்தினருக்கும் உரிய ஒரு பண்டிகையாகச் சிறப்பித்துச் சொல்லப்படும் வகையில் சித்திரைப் புதுவருடம் அமைந்துள்ளது. இந்து தமிழ் மக்களும், பௌத்த சிங்கள மக்களும் பொதுப்பண்டிகையாக சித்திரைப் புத்தாண்டைக் கொண்டாடுகிறார்கள்.

வேறுபட்ட மதங்களையும் மொழிகளையும் கொண்டுள்ள மக்கள் இணைந்து பண்டிகையொன்றை பெருவிழாவாகக் கொண்டாடுவது உலகில் வேறெங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த வகையில், இரு மதம் இரு மொழி சார்ந்த வகையில் சித்திரைப் புதுவருடம் இருப்பதால் இலங்கையில் இது ஒரு தேசியப் பெருவிழாவாக முக்கியத்துவம் பெறுகின்றது.

சித்திரைப் புதுவருடப் பிறப்பின் போது தமிழ், சிங்கள மக்கள் வெவ்வேறு பாரம்பரிய சமய அனுட்டான முறைகளை மேற்கொண்டு வருகிறார்கள். புதுவருடப் பிறப்பன்று விஷு புண்ணிய காலத்தில் தலைக்கு மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது இந்து மக்களது வழக்கம் என்பதுடன் அதுவே புதுவருடத்தில் முதற்கருமமாகவும் அமைகிறது.

புதுவருடம் பிறந்ததும் சுபநேரத்தில் தலைக்கு எண்ணெய் வைத்து ஆசி பெறுவது பௌத்த மக்களது பாரம்பரிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வருவதுடன் அதுவே அவர்களது புதுவருடத்தில் ஆரம்பக் கருமமாகவும் இருக்கிறது.

இந்து மக்கள் மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது என்பது முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்ல, அனைவராலும் தவறாது பின்பற்றப்படவும் வேண்டியதாகும்.






புதுவருடம் பிறப்பதற்கு முன்னரும், வருடப் பிறப்புக்கு முன்னருமான விஷு புண்ணிய காலத்தில் கிழக்கு அல்லது வடக்கு திசையை பார்க்கும் வகையில் நின்றவாறு தலைக்கு மருத்துநீர் தேய்த்த பின்னர் பஞ்சாங்கத்தில் சொல்லப்பட்டவாறு தலையிலும் காலின் அடியிலும் குறிப்பிட்ட இலைகளை வைத்து ஸ்நானம் செய்தல் வேண்டும்.

ரிஷிகள், முனிவர்கள் மற்றும் சித்தர்களால் அறிமுகம் செய்யப்பட்ட மூலிகை மருத்துவமுறைகளுடன் தொடர்புள்ளதான இலைகளையும் மற்றும் திரவியங்களையும் சேர்த்து காய்ச்சிப் பெறும் இந்த மருத்துநீரானது மருத்துவக்குணம் கொண்டிருக்கிறது.

எனவே இதனை தலையிலும் உடலிலும் தேய்ப்பதால் தோலிலும் உடலின் உள்ளேயும் இருக்கும் வியாதிகள் நீங்கப் பெறுவதுடன், வாழ்வில் பீடித்துள்ள தோஷங்களும், கர்மவினைகளும் தெய்வீக ரீதியில் அகன்று விமோசனம் கிடைக்கக் கூடியதாக இருக்கிறது. பொதுவாக ஆலயங்களில்தான் மருத்துநீர் காய்ச்சப்படுவதால் ஒருவகையில் இது தெய்வீகத்தன்மை வாய்ந்ததாகவும் அமைந்திருக்கிறது என்று சொல்லலாம்.

ஸ்நானம் செய்த பின்னர், அனைவரும் பஞ்சாங்கத்தில் குறிப்பிட்டுள்ளவாறான நிறத்திலான புதிய வஸ்திரங்களை அணிந்து, முதலில் வீட்டுப் பூஜை அறையிலும் பின்னர் ஆலயங்களுக்கும் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும்.

தாய் தந்தையர், குரு, பெரியோர்கள் முதலானவர்களை வணங்கி அவர்களது ஆசியைப் பெறுவதும், ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கு பணம் அல்லது பொருட்களை வழங்கி தானதருமங்களை செய்வதும், குறிக்கப்பட்ட சுபநேரத்தில் கைவிசேடம் பரிமாறிக் கொள்வதும், உறவினர்கள் நண்பர்களது வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதும், விருந்துபகாரங்களில் கலந்து கொள்வதும், சுபதினம் மற்றும் சுபநேரம் பார்த்து புதுக்கருமங்களை தொடங்குவதும் புதுவருடப் பிறப்பின் பின்னரான சிறப்புச் செயற்பாடுகளாகும்.

சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டத்தின் போது தமிழ், சிங்கள மக்கள் தனித்தனியான பாரம்பரிய கலாசார நடைமுறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். தமிழ் மக்களது கொண்டாட்ட செயற்பாடுகள் கூட இடத்துக்கிடம் மாறுபடுகிறது. அதாவது இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் அந்தந்தப் பிரதேசங்களின் கலாசார மரபுகளுக்கு அமைய வைபவ நிகழ்வுகளும் கொண்டாட்ட நடைமுறைகளும் வேறுபட்டு இருப்பதையும் காண முடிகிறது.

இந்த வகையில் வடபகுதியில் குறிப்பாக யாழ்குடாநாட்டை நோக்கினால் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் நகரப் பகுதிகளில் சித்திரைப் புதுவருட கொண்டாட்ட நிகழ்வுகளும் சம்பிரதாய நடைமுறைகளும் ஒரே மாதிரியானதாகவே அமைந்திருக்கின்றன.

யாழ்குடாநாட்டிலபாரம்பரிய போட்டி நிகழ்வாக கோழிச்சண்டை அமைந்திருக்கிறது. சண்டை செய்வதற்கென்றே சேவல்கள் வளர்க்கப்பட்டு வந்தன. யாழ்குடாநாட்டு கிராமங்களில் ஏற்கனவே ஒருகாலத்தில் இந்த விளையாட்டு பாரம்பரியம் பெற்றுத் திகழ்ந்தது.

இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது என்றே சொல்ல வேண்டும். சித்திரைப் புதுவருடத்தின் போது கிளித்தட்டு, சடுகுடு, கோலாட்டம் போன்ற விளையாட்டுகளை ஏற்பாடு செய்து நடத்துவதுடன் ஊஞ்சலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், பல்லாங்குழி, சொக்கட்டான் போன்ற பெண்கள் கலந்து கொள்ளும் விளையாட்டுக்களும் அக்காலத்தில் இடம்பெறுவதுண்டு.

அத்துடன் மாட்டுவண்டிச் சவாரி, துவிச்சக்கர வண்டி ஓட்டம், மரதன் ஓட்டம் போன்ற போராட்டங்களும் புதுவருட சிறப்பு நிகழ்வுகளாக நடைபெற்று வருகின்றன. பழையனவற்றையெல்லாம் மறந்து விட்டு புதிய எதிர்பார்ப்புகளையும், நம்பிக்கைகளையும் வைத்து வரவேற்கப்படும் சித்திரைப் புதுவருடமானது சித்திரைப் புத்தாண்டை தமிழ்ப் புத்தாண்டு என்றும் கூறுவர். அதாவது தமிழர்களுக்குரிய புதிய ஆண்டு பிறப்பதைக் கொண்டாடும் விழா இதுவாகும். இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் சித்திரை மாதத்தின் முதல் நாளை சித்திரைப் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

இலங்கையில் இதனை தமிழ், சிங்களப் புத்தாண்டு என்றும் குறிப்பிடுவர். ஏனெனில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்குமான பொதுப்பண்டிகையாக இப்புத்தாண்டு கொண்டாடப்படுகின்றது.

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்ட காலப் பகுதியாகும். பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றி வருவதற்கு 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 செக்கன்கள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும்.

சூரியன் மேச இராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

ஆங்கில கிரெகொரிய நாட்காட்டியில் பெரும்பாலும் ஏப்ரல் 14 ஆம் திகதி தொடங்கும் தமிழ் ஆண்டு சில ஆண்டுகளில் ஏப்ரல் 13 அல்லது 15 ஆம் திகதிகளில் தொடங்கும். இதற்குக் காரணம் ஆங்கில (கிரகோரியன்) நாட்காட்டி ஒரே சீரானதாக இல்லை என்பதேயாகும்.

நடைமுறைக்கு ஏற்றதாக தமிழ்ப் புத்தாண்டு ஒரு குறிப்பிட்ட நாளில் கொண்டாடப்பட்டாலும், தமிழ்ப் பஞ்சாங்கங்களில் அந்த நாளில் ஆண்டு பிறக்கும் சரியான நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். அதன் அடிப்படையிலேயே ஆண்டுக்காலம் கணிக்கப்படுகிறது.

தமிழரிடையே சித்திரைப் புத்தாண்டு என்ற பண்டிகை எப்போதிருந்து வழக்கில் இருந்ததென்பதற்கான சரியான ஆதாரங்கள் இல்லை. ஆனால் இப்புத்தாண்டு மிகத் தொன்மையானதாகக் கருதப்படுகின்றது.

தமிழ் நாட்காட்டியானது இராசிச் சக்கரத்தை காலக்கணிப்பில் பயன்படுத்தும் ஒரு சூரிய நாட்காட்டி என்பதால், பன்னிரு இராசிகளில் முதல் இராசியான மேழத்தில் சூரியன் நுழையும் சித்திரையே முதல் மாதமாகக் கருதப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

இலங்கையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சித்திரை ஒன்றையே முதன்மையான புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். இலங்கை தம்பதெனியா இராச்சிய மன்னன் பராக்கிரமபாகுவின் அரசகுருவான தேனுவரைப்பெருமாள் எழுதிய 'சரசோதி மாலை' எனும் நூலில் வருடப்பிறப்பின் போது செய்ய வேண்டிய சடங்குகள் விபரிக்கப்பட்டுள்ளன.

சித்திரைப் புத்தாண்டில் பரிமாறப்படும் மரபார்ந்த சிற்றுண்டிகள் சிறப்பு வாய்ந்தவையாகும். இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்குமிடையில் சித்திரைப் புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் பல ஒற்றுமையான அம்சங்கள் உள்ளன. புத்தாண்டுப் பட்சணங்களிலும் ஒற்றுமை உள்ளது.புத்தாண்டுக்கு முந்திய நாட்களை வீடு வாசலை சுத்தம் செய்வதிலும், அலங்கரிப்பதிலும் தமிழர் செலவழிப்பர். மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள், வெற்றிலை, பாக்கு, நகைகள், நெல் முதலான மங்கலப் பொருட்கள் வைத்த தட்டை வழிபாட்டறையில் வைத்து, அதை புத்தாண்டு அதிகாலையில் காண்பது புனிதமாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் அந்தப் பாரம்பரியம் பெரும்பாலும் வழக்கொழிந்து விட்டதென்றே கூற வேண்டும். புத்தாண்டு தினத்தன்று அதிகாலையில் நீராடி கோலமிட்டு, புத்தாடை அணிந்து, கோயிலுக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் நிகழும். வாழ்க்கை என்றாலே கசப்பும் இனிப்பும் கலந்ததுதான். இப்புத்தாண்டிலும் கசப்பும் இனிப்பும் இருக்கும் என்பதன் அடையாளமாக வேப்பம்பூ பச்சடி, மாங்காய் பச்சடி என்பவற்றை உண்பது குறிப்பிடத்தக்க மரபாகும்.

மூத்தவர்களால் இளையவர்களுக்கு, புத்தாண்டு அன்பளிப்பாக வழங்கப்படும் பணமே 'கைவிசேடம்' எனப்படுகிறது.

**த. மனோகரன்...**
**அ. கனகசூரியர்...**

# தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் ஒரேவிதமான புதுவருட கலாசாரம்



தமிழ் வருடங்கள் அறுபது உள்ளன. இந்த அறுபது வருடங்களில் இவ்வருடமான சோபகிருது ஆண்டு 37 ஆவது வருடத்தைக் குறிக்கின்றது.ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் கொண்டு மழை, காற்று, பயிர்வளம் போன்ற இயற்கைக்கால பலாபலன்களை மாற்றி அமைப்பன. இவ்வருடத்தின் ஆரம்பம் பிரம்மா உலகப் படைப்பை ஆரம்பித்த நாள் என்பது புராண ஐதீகம். இதையே புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம்.

இந்நாளில் பாவங்கள் தோஷங்கள் நீங்க வேண்டி ஆலயங்களில், அர்ச்சகர் இல்லங்களில் மருந்துவகை, பூவகை, வாசனைத் திரவியம் போன்றவை போட்டுக் காய்ச்சிய மருத்துநீரை தலையிலே தேய்த்து ஸ்நானம் செய்து உலகின் கண்கண்ட தெய்வமாக மிளிரும் சூரியபகவானுக்கு வீடுகளில் பொங்கலிட்டு பூஜை செய்ய வேண்டும். அதன் பின்னர் புத்தாடை, ஆபரணங்கள் அணிந்து ஆலய வழிபாடு செய்ய வேண்டும். குரு, பெரியோர் ஆசிகள் பெற்று அறுசுவை உணவு உண்டு இரவில் மங்களகரமாய் நித்திரைக்குச் செல்ல வேண்டும். இது எம்மவரின் பாரம்பரிய மரபாகும்.

மங்களகரமான இந்நாட்களில் மனதில் மகிழ்ச்சி ஏற்படும் வண்ணம் நடந்து கொள்வதால், இந்த வருடம் முழுநாளும் மனங்கள் மகிழ்வு பெறும் என்பது எம்மக்களின் ஐதீகமாகும்.

சித்திரைப் புத்தாண்டு வருடப் பிறப்பை இந்துக்களும் பௌத்தர்களும் கொண்டாடி வருகின்றனர். இலங்கைவாழ் இந்து மக்களும் பௌத்த சிங்கள மக்களும் ஒருமித்துக் கொண்டாடும் தனிச்சிறப்புப் பெற்றது சித்திரைப் புதுவருடப் பிறப்பு. அதனால் இது ஒரு தேசிய தின விழாவாகும். பல விதமான பட்சணங்களுடன் விருந்தினர்களை உபசரித்தல் புத்தாடை அணிதல், பெரியோரை வணங்கி ஆசி பெறுதல், பொங்கல் பொங்குதல் ஆகியன இரு மக்களிடையேயும் ஒரே மாதிரியாக கைக்கொள்ளப்பட்டு வருகின்றன.பௌத்த மக்களும் இந்துத் தெய்வ நம்பிக்கையுடன் வாழ்கின்றார்கள்.

இதேநேரம் பாடசாலைகள், வியாபார ஸ்தலங்கள் போன்ற இடங்களிலும் புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுண்டு. வழிபாடுகள் முடிவடைந்ததும் உற்றார், உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று புதுவருட பலகாரங்கள் உண்டு மகிழ்வர். புதுவருடத்தை மகிழ்ச்சியோடு வரவேற்கும் பொழுது பழைய கடன்கள் ஏதும் இருந்தால் அவற்றைத் தீர்த்துக் கொள்வர். நல்ல சுபவேளையில் கைராசியுள்ளவர்களிடம் ஏனையவர்கள் கைவிஷேடம் பெற்றுக் கொள்வது நல்ல பண்பாகும். மேலும் சுபவேளையில் வியாபார ஸ்தலங்களில் பிள்ளையார் சுழிபோட்டு புதுக்கணக்கைத் தொடங்குவார்கள். இதேநேரம் வங்கிகளிலும் புதுக்கணக்கை ஆரம்பிக்கும் போது பரிசுகளையும் வழங்குவார்கள். பிள்ளைகள் சுபவேளை பார்த்து பாடத்தைப் படிக்கத் தொடங்குவார்கள்.

மாதா, பிதா, குரு ஆகியவர்களை விழுந்து கும்பிட்டு ஆசிபெறுதல் மற்றொரு சிறந்த பண்பாகும். சித்திரை மாதம் சிறுமாரி என மழை பெய்யத் தொடங்கும். மலர்கள் பூத்துச் சொரியும். பயிர்கள் செழிக்கும். சோழகக் காற்று வீசத் தொடங்கும்.வேப்பம்பூ சொரியும்.

தமிழர்களைப் போலவே பௌத்த மக்களும் சித்திரைப் புத்தாண்டன்று அதிகாலையில் மருத்துநீர் வைத்து நீராடி, புத்தாடை அணிந்து பௌத்த விகாரைக்குச் சென்று வழிபடுவர். மாலை வேளையில் உறவினர் வீடுகளுக்குச் செல்வதும், பலகாரங்களை பகிர்ந்துண்பதும் வழக்கத்தில் இருக்கிறது.

சித்திரை மாதம் பிறந்ததுமே 'இளவேனில் காலம்' என்னும் வசந்த காலம் தொடங்குகிறது.

வசந்த காலத்தில் மாமரங்களில் மாந்தளிர்களும் மலர்களும் பூத்துக் குலுங்கும். அச்சமயம் வேப்ப மரங்களில் வேப்பம் பூக்கள் பூத்துக் குலுங்கும். மனித வாழ்க்கை இனிப்பும் கசப்பும் கலந்தே இருக்கும் என்பதை எடுத்துக் காட்டும் அம்சமாக இச்செயற்பாடு கருதப்படுகிறது.

ஐக்கியம், சமய சமூக கலாசார உறவுகள், பண்பாட்டுக் கோலங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டும் வகையிலும் நல்லெண்ணம், நல்லுறவு, ஐக்கியம், அன்புப் பரிமாற்றம், குதூகலம், விருந்தோம்பல் போன்ற மனிதப் பண்பாட்டின் உயர்ந்த அம்சங்களை வெளிப்படுத்தும் வகையிலும் கொண்டாடப் படும் சமூக விழாவான புதுவருடத்தில் இறைவழிபாடு, தானதர்மம், ஆசிபெறுதல் என்பவற்றை மக்கள் கடைப்பிடிப்பது வழக்கம்.

சித்திரைப் புத்தாண்டில் வாசலில் கோலமிட்டு அழகுபடுத்த வேண்டும். வாயிற்படிகளுக்கு மஞ்சள் குங்குமம் இட்டு மாவிலைத் தோரணங்களை கட்டி மங்கலம் சேர்க்க வேண்டும். வாயிற்படி நிலைவாயிலில் மஞ்சள் பூசி சாணத்தால் மெழுகி அழகிய மாக்கோலமிட்டால் திருமகள் வாசம் செய்வாள் என்பது நம்பிக்கையாகும்.

சிங்கள மக்கள் காலையில் எழுந்து நீராடி புதிய வெள்ளை ஆடை அணிந்து பௌத்த விகாரைகளுக்கு சென்று வழிபடுவர். கிரிபத் (பாற்சோறு) மற்றும் பிற பலகாரங்களை உறவினர் நண்பர்களுடன் பகிர்ந்து உண்டு களிப்பர். பெரியோரை மதித்து கை விசேடம் பெறுவர். சிறுவர்கள் பட்டாசு கொளுத்தி மகிழ்வர்.







# கிழக்கின் குரல்



# விவசாயிகளுக்கு இலவச டீசல் விநியோகம் நாளை பூர்த்தி

## மட்டு. கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர்



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

கடந்த பெரும்போக நெற்செய்கை அறுவடைக்காக சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலவச டீசல் விநியோக நடவடிக்கையானது நாளை வெள்ளிக்கிழமை (14) வரையே தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களினூடாக வழங்கப்படுமென, மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் கே.ஜெகநாத் தெரிவித்தார்.

ஆகையினால், இதுவரையில் இலவச எரிபொருளை பெற்றுக் கொள்ளாத விவசாயிகள் முன்வந்து தமக்குரிய எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறும், அவர் கேட்டுக் கொண்டார். மட்டக்களப்பு மாவட்டத்துக்காக 196,818.9 லீற்றர் டீசல் கிடைத்ததுடன், இதுவரையில் 112,873 லீற்றர் டீசல் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய டீசல் தற்போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த அடிக்கட்டுப் பசளை விநியோக நடவடிக்கை நேற்றையதினத்துடன் (12) பூர்த்தியடைந்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 2022/2023 இல் பெரும்போக நெற்செய்கையை மேற்கொண்ட விவசாயிகளுக்கான அடிக்கட்டு பசளை (TSP ), யு.எஸ்.எயிட் மற்றும் எப்.இ.ஓ நிறுவனங்களினால் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்காக 1,845.7 மெற்றிக்தொன் அடிக்கட்டுப் பசளை கிடைத்ததுடன், இதுவரையில் 1,011.47 மெற்றிக்தொன் அடிக்கட்டுப் பசளை விவசாயிகளுக்கு பகிந்தளிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அடிக்கட்டுப் பசளை விநியோக நடவடிக்கை நேற்றையதினத்துடன் பூர்த்தியடைகின்றமை தொடர்பாக விவசாயிகளுக்கு குறுந்தகவல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## காத்தான்குடி அபிவிருத்தி கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராய்வு



**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் காணி, மீன்பிடி, நீர்வளங்கள், சுகாதாரம், சமுர்த்தி உள்ளிட்ட பல்வேறு பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

காத்தான்குடி பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிரதேச செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை (10) நடைபெற்றதுடன், இந்தக் கூட்டத்துக்கு பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் அமைச்சருமான ஹாபீஸ் நஸீர் அஹமட் தலைமை தாங்கினார்.

இதில் காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறீதர், உதவிப் பிரதேச செயலாளர் எம்.எஸ். சில்மியா, காத்தான்குடி நகரசபை செயலாளர் ரிப்கா ஷபீன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நிர்மல ராஜா உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், திணைக்கள அதிகாரிகள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## திருமலை ஊடகவியலாளர்கள் 35 பேருக்கு உலர் உணவுகள்

**தம்பலகாமம் குறூப், தோப்பூர் குறூப் நிருபர்கள்**

திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் 35 பேருக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) வழங்கி வைக்கப்பட்டன.

உவர்மலைப்பிரிவில் அமைந்துள்ள அகம் மனிதாபிமான வள நிலையத்தில் வைத்து இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மிகவும் கடினமான காலப்பகுதிகளில் ஊடகச் செயற்பாடுகளில் ஊடகவியலாளர்கள் ஈடுபட்டமையை கௌரவிக்கும் முகமாகவும் ரமழான் மாதத்தை சிறப்பிக்கும் முகமாகவும் எதிர்வரும் தமிழ்- சிங்கள புத்தாண்டை முன்னிட்டும் ஊடகவியலாளர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்டச் செயலக ஊடக உத்தியோகத்தர், திருகோணமலை மாவட்டச்செயலக அரச சார்பற்ற ஒருங்கிணைப்பாளர், மனிதாபிமானவள நிலைய ஒருங்கிணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கல்முனை இராவணா விளையாட்டு கழகத்தின் சித்திரைத் திருவிழா

கல்முனை மாநகர் இராவணா விளையாட்டுக்கழகத்தின் சித்திரை புத்தாண்டு திருவிழா நாளை 14ஆம் திகதியும் நாளை மறுதினம் 15ஆம் திகதியும் கோலாகலமாக நடைபெறவுள்ளது.

சிறுவர்களுக்கான ஓட்டப் போட்டி, நடனம், பாடல், மரதன் ஓட்டம் ஆகியன நடைபெறவுள்ளன.

அத்துடன் மைதான விளையாட்டுகள், வழுக்குமரம் ஏறுதல், தலையணைச் சமர் , கயிறு இழுத்தல், முட்டை எறிந்து பிடித்தல், பிரியாணி உட்கொள்ளுதல், சங்கீதக் கதிரை, கிடுகு பின்னுதல் உட்பட பாரம்பரிய விளையாட்டுகளும் நடைபெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, மட்டக்களப்பு சுருதீஸ்வரம் இசைக் குழுவின் இசைத் திருவிழாவும் நடைபெறவுள்ளதாகவும், ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

ஆகையினால், இந்த விழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கல்முனை இராவணா விளையாட்டுக்கழகத்தினர் அன்புடன் அழைத்துள்ளனர்.

## உஷ்ண காலநிலை; கல்முனையில் தனியார் வகுப்புகள் இடைநிறுத்தம்!

**கல்முனை விசேட, சாய்ந்த மருது விசேட, மருதமுனை தினகரன் நிருபர்கள்**



ரமழான் நோன்பு, தமிழ்-சிங்கள புத்தாண்டு மற்றும் உஷ்ணமான காலநிலையையிட்டு கல்முனை மாநகரசபைப் பிரிவில் தரம் -01 தொடக்கம் தரம்-10 வரையான தனியார் வகுப்புகளை எதிர்வரும் 24ஆம் திகதிவரை இடைநிறுத்துவதற்கு, கல்முனை மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

இந்த நடவடிக்கை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) முதல் நடைமுறைக்கு வந்ததாகவும், அம் மாநகரசபை தெரிவித்தது.

இது தொடர்பான கடிதத்தை தனியார் கல்வி நிலையங்களுக்கு கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அனுப்பியதுடன், இக்கடிதத்தின் பிரதிகள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர், கல்முனை, சாய்ந்தமருது மற்றும் பெரியநீலாவணை பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இம்மாதம் அதிக உஷ்ணத்துடன் காணப்படும் நிலையில், தனியார் கல்வி நிலையங்களில் பொருத்தமற்ற நேரங்களில் தொடர்ந்து வகுப்புகள் நடத்தப்படுவதால் மாணவர்களும் பெற்றோரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக முறைப்பாடுகள் கிடைத்தன. இதனைக் கருத்தில் கொண்டு தனியார் வகுப்புகளை இடைநிறுத்தக் கோருவதுடன், இதற்கு ஒத்துழைக்குமாறும், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி கேட்டுக்கொண்டார்.

## கிழக்கில் குளிர்பானம் அமோக விற்பனை

**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் குளிர்பான விற்பனை அமோகமாக நடைபெற்று வருவதாக, நுகர்வோர் தெரிவித்தனர்.

தற்போது இம்மாவட்டங்களில் நிலவும் கடும் வெப்பமான காலநிலையைத் தொடர்ந்து பொதுமக்களின் தாகத்தை தணிக்கும் வகையில் குளிர்பானம் அமோகமாக விற்பனை செய்யப்படுகின்றது.

இந்நிலையில், பிரதான வீதியோரங்களில் திடீரென குளிர்பானக் கடைகள் அதிகரித்துள்ளதுடன், பொதுமக்களும் குளிர்பானக் கடைகளை நோக்கிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இளநீர், நுங்கு மற்றும் வெள்ளரிப்பழம் உட்பட இயற்கையான பழச்சாறுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

## அட்டாளைச்சேனையில் ஹெரோயினுடன் கைதான நபருக்கு விளக்கமறியல்

**பாலமுனை தினகரன் நிருபர்**

ஹெரோயினுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா உத்தரவிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் இச்சந்தேகநபரை 20 மில்லிகிராம் ஹெரோயினுடன் பொலிஸார் கைது செய்தனர்.

இச்சந்தேகநபர் ஹெரோயின் வைத்திருந்தமை தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து, இவரைக் கைது செய்த பொலிஸார், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, சந்தேகநபருக்கு இந்த விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பற்று நீதிமன்ற தீ விவகாரம்; 3 சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

**ஒலுவில் விசேட நிருபர்**

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவணக் காப்பகத்தை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 3 சந்தேக நபர்களுக்கும் மீண்டும் விளக்கமறியல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இம்மூவரையும் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) உத்தரவிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி அதிகாலையில் மேற்படி நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயினால் நீதிமன்றத்தின் வழக்கு பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் போன்ற பல பிரிவுகளிலுள்ள ஆவணக் கோப்புகள் முற்றாக எரிந்துள்ளன.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமெராவில் 3 நபர்கள் முகத்தை மூடியவாறு நீதிமன்ற வளாகத்தில் உள்நுழைந்து கட்டடத்துக்கு தீ வைத்து விட்டு தப்பியோடும் காட்சி பதிவாகியிருந்தது.

இதனைத் தொடர்ந்து, இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 28, 24, 19 வயதுடைய இம்மூன்று சந்தேகநபர்கள் கல்முனை பெரியநீலாவணை பிரதேசத்தில் மறைந்திருந்த போது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இப்தார்






**கல்லடி குறூப், மட்டக்களப்பு குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்**

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு, அம்மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) மாலை நடைபெற்றது.

கிராத் ஓதலுடன் இப்தார் நிகழ்வு ஆரம்பமாகியதுடன், ரமழான் பற்றிய விசேட உரையை மஃஹதுஸ் சுன்னா மகளிர் அரபுக் கல்லூரியின் பிரதி அதிபர், மௌலவி எம்.எம். எம்.மன்சூர் நிகழ்த்தினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா, இப்புனித ரமழான் மாதத்தில் அன்பையும் பாசத்தையும் சகோதரத்துவத்தையும் மேலும் வலுச்சேர்க்கும் முகமாக இந்நிகழ்வு அமையப் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

## வலையை வெட்டி சேதமாக்கிய முறைப்பாடு; சமுத்ராகம கடற்றொழிலாளர் அறுவர் கைது!

**றொட்டவெவ குறூப் நிருபர்**

சமுத்ராகம பகுதி கடற்றொழிலாளர்கள் சிலர் தொடர்பாக மனையாவெளி கடற்றொழிலாளர்கள் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, சமுத்ராகம பகுதியைச் சேர்ந்த 6 கடற்றொழிலாளர்களை சந்தேகத்தின் அடிப்படையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

தாம் கரைவலை இழுத்துக்கொண்டிருந்த போது வருகை தந்த சமுத்ராகம பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்கள் சிலர், தமது வலையை வெட்டியதுடன், தாம் பிடித்த மீன்களையும் எடுத்துச் சென்றுள்ளதாக துறைமுக பொலிஸ் நிலையத்தில் மனையாவெளி கடற்றொழிலாளர்கள் முறைப்பாடு செய்தனர்.

இம்முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் இந்த 6 கடற்றொழிலாளர்களையும் கைது செய்துள்ளதாகவும் இவர்களை திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில் 35 பேருக்கு விவசாய உபகரணங்கள்



**கிண்ணியா மத்திய, அன்புவழிபுரம் தினகரன் நிருபர்கள்**

திருகோணமலை மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் 35 மாற்றுத்திறனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (11) வழங்கி வைக்கப்பட்டன.

திருகோணமலை நகராட்சிமன்ற மண்டபத்தில் வைத்து அவர்களுக்கு இந்த விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சென்டர் போ. ஆன்டிகப் நிறுவனம் முன்னெடுத்துள்ள இந்த செயற்றிட்டத்துக்கு அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவனம் நிதி உதவி வழங்கியது.

இந்நிகழ்வில் அவுஸ்திரேலியன் எய்ட் நிறுவன பிரதிநிதிகள், திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் பிரணவன், சென்டர் போ. ஆன்டிகப் நிறுவன பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## அக்கரைப்பற்றில் சுகாதார சீர்கேடு; 5 வீடுகளுக்கு சிவப்பு எச்சரிக்கை!



**அட்டாளைச்சேனை குறூப் நிருபர்**

அம்பாறை மாவட்டத்தின் அக்கரைப்பற்றுப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட டெங்கு சோதனையின் போது, நுளம்புகள் பெருகும் வகையில் சுற்றுச்சூழலை வைத்திருந்த ஐந்து வீட்டு உரிமையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி, மருத்துவர் எப்.எம்.ஏ.காதர் தெரிவித்தார்.

அத்துடன், வீடுகளையும் எல்லைப் புறங்களையும் சுகாதாரச் சீர்கேடாக வைத்திருந்த சிலருக்கு அறிவுரை வழங்கப்பட்டன.

சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டு பிரிவினரால் பிரகடனப்படுத்தப்பட்ட தேசிய நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் கடந்த 6ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்பட்டது. இதன்போது, அக்கரைப்பற்றிலுள்ள வீடுகளில் அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் கடந்த திங்கட்கிழமை (10) சோதனை நடத்தியதாகவும், அவர் தெரிவித்தார்.

# நகர்வலம்



# பேருவளையில் இன நல்லுறவை வலுப்படுத்தும் புத்தாண்டு பாரம்பரிய கலாசார நிகழ்வு

## பிரதேச முஸ்லிம் பாடசாலைகளும் பங்கேற்பு





**பேருவளை விசேட நிருபர்**

பேருவளையில் சிங்கள முஸ்லிம் இன உறவை மேலும் சக்தி பெறச் செய்யும் நோக்குடன் விசேட புத்தாண்டு பாரம்பரிய கலை கலாசார நிகழ்ச்சியொன்று பேருவளை மங்கள பிரிவன விகாரையில் சிறப்பாக நடைபெற்றது.

பேராதனை பல்கலைக்கழக புவியியல் பிரிவின் பேராசிரியரும் மங்கள பிரிவன விகாரையின் அதிபதியுமான சங்கைக்குரிய பின்னவல சங்கசுமன தேரோ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஸ்ரீ அமரவன்ச தர்ம பாடசாலை சிறார்களின் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற்றதோடு பேருவளை பகுதி அஹதிய்யா பாடசாலை, அரபுக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்களும் இதில் பங்குபற்றினர்.

சித்திரைப் புத்தாண்டையொட்டி கலாசார நல்லிணக்கத்தை இரு சமூகங்களுக்கு மத்தியில் பரிமாறிக் கொள்ளும் நோக்குடன் இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் பின்னவல சங்க சுமன தேரோ கூறியதாவது, பேருவளையில் சிங்கள முஸ்லிம் மக்கள் புரிந்துணர்வோடு மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர். இந்த இன நல்லுறவை தொடர்ந்து கட்டியெழுப்புவதோடு பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற நோக்குடன் சித்திரைப்புத்தாண்டு நிகழ்ச்சி முஸ்லிம் சகோதரர்களின் பங்குபற்றலோடு இந்த விகாரையில் இடம்பெறுகிறது. புனித ரமழான் மாதத்தில் நோன்பு நோற்றவர்களாக இந்த நிகழ்வில் முஸ்லிம்கள் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். எமது சமயப் பாடசாலை சிறார்கள் சுமார் 100 பேர் உட்பட ஆசிரியர்கள், மதகுருமார்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி கெச்சிமலை தர்கா வளவில் நடைபெறும் இன நல்லுறவு ஒன்றுகூடலில் பங்குபற்றவுள்ளனரெனவும் அவர் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன தலைவர் எம்.எச்.எம் உவைன் ஹாஜியார் பேசும் போது பேருவளை சிவில் பாதுகாப்பு கமிட்டியின் சிபாரிசின் பேரில் இந்த விகாரையில் இவ்வாறான தொறு நிகழ்ச்சி இடம்பெறுகிறது. இனத்தாலும் மதத்தாலும் மொழியாலும் கலாசாரத்தினாலும் நாம் வேறுபட்டபோதிலும் அனைவரும் இலங்கையர்களே. இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு மிக அவசியம். பௌத்த விகாரையின் என்ன நடக்கிறது என்பதை முஸ்லிம்களும் பள்ளிவாசல்களில் என்ன நடக்கிறது என்பதை பெரும்பான்மை சமூகத்தினரும் நன்கு அறிந்து கொள்ள இவ்வாறான நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமானதாகும். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்த மங்கள பிரிவன அதிபதி உட்பட ஏற்பாட்டாளர்களுக்கு நன்றி கூறுகிறேன் என்றார்.

# புத்தாண்டை முன்னிட்டு அநுராதபுரம் நகரத்தில் விசேட பாதுகாப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

புத்தாண்டு காலத்தை முன்னிட்டு அநுராதபுரம் நகரம் மற்றும் அதனைச் சூழவுள்ள உப நகர பொலிஸ் பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

புத்தாண்டு காலத்தில் ஆடைகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் பணப்பை கொள்ளையர்களிடம் அவதானமாக இருக்குமாறும் பொலிசார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பண்டிகை காலத்தின் போது மக்களின் பாதுகாப்பு கருதி வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸ் மற்றும் இராணுவத்தினரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மதுபோதையில் வாகனம் செலுத்துவோரை கைது செய்யவும் போக்குவரத்து பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# புத்தளத்தில் பேரீத்தம் பழங்கள் பகிர்ந்தளிப்பு



**(புத்தளம் தினகரன் நிருபர்)**

சவூதி அரேபிய அரசாங்கத்தினால் இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்ட 50 தொன் பேரீத்தம் பழங்களின் ஒரு தொகுதி புத்தளம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட பள்ளிவாசல்களின் நிர்வாகிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதேவேளை புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் பீ.சீ.எம்.எச். நிறுவனத்தினால் புத்தளம் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத பள்ளிவாசல்களுக்கு நோன்புக் கஞ்சி சமைப்பதற்கான அரிசியும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினருடன் புத்தளம் மாவட்ட செயலாளர் ஹேரத்தும் இணைந்து அரிசி மற்றும் பேரீத்தம் பழங்களை பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் வழங்கி வைத்தனர்.

### சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட சகல

# ஊடகங்களையும் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையை உருவாக்க அரசு கவனம்

## நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களையும் ஒழுங்குபடுத்தும் வகையில் ஒளிபரப்பு தொடர்பான அதிகார சபை ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அந்த அதிகார சபையானது அனைத்து ஊடகங்களுடனும் சம்பந்தப்பட்டதாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி அதிகார சபையை உருவாக்குவது தொடர்பான சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்டுள்ள அவர், அதற்கான சட்டமூலம் தயாரிப்பது தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்;

# கடினபந்து கிரிக்கட் விளையாட்டில் ஈடுபடும் பாடசாலைகளுக்கு உபகரணங்கள் வழங்கல்




**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் ஏற்ப ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கடினபந்து கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டுவரும் பாடசாலைகளுக்கு 2023 வருடத்திற்கு தேவையான கிரிக்கெட் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு சூரியவெவ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வினை ஹம்பாந்தோட்டை மாவட்ட கிரிக்கெட் சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இம்மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் தலைவர் பானுக வணிகசேகர தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றதோடு இதில் தலைவருடன் செயலாளர் கெலும் பிரபாத், பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் உதவிச் செயலாளர் லீலா நந்தகுமார சிறி, மாவட்ட பயிற்சியாளர் உட்பட பாடசாலைகளின் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும் விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர்.

ஹம்பாந்தோட்டை ஸாஹிரா தேசிய பாடசாலையின் சார்பாக 15 வயதின் கீழ் கிரிக்கெட் அணியின் தலைவர் ஆகிப் இர்பான், உதவித் தலைவர் ஆர். எம்.பாஹிம் ஆகியோர் கலந்துகொண்டு பாடசாலைக்கான விளையாட்டு உபகரணங்களை பெற்றுக்கொண்டனர்.

# நாரஹேன்பிட அபயராம விகாரையில் இப்தார் நிகழ்வு; முக்கியஸ்தர்கள் பங்கேற்பு





**ருஸைக் பாரூக்**

ஸ்ரீ லங்கா இஸ்லாமிய நிலையம் மற்றும் கொழும்பு இளைஞர் பௌத்த சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த இப்தார் வைபவம் நாரஹேன்பிட அபயராம விகாரையில் விகாரையின் பிரதம விஹாராதிபதியும் கொழும்பு பல்கலைக்கழக வேந்தருமான வண. முருத்தேட்டுவே ஆனந்த தேரர் தலைமையில் நடைபெற்றது.

இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் டாக்டர் நாஸ் ஹனிபா வரவேற்புரையாற்றினார். பெல்லன்வில ரஜமஹா விகாரையின் பிரதம விஹாராதிபதி வண. பெல்லன்வில தம்மரதன தேரர் மற்றும் மௌலவி எம்.எஸ்.எம். முஜீப் ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்வில் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ராஜித சேனாரட்ன, திஸ்ஸ அத்தநாயக்க உட்பட போஹ்ரா சமூக உறுப்பினர்கள், இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபன தலைவர் ஹட்சன் சமரசிங்க, இஸ்லாமிய நிலையத்தின் தலைவர் ஹுசைன் மொஹமட் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இளைஞர் பௌத்த சங்கத்தின் தலைவர் மஹிந்த ஜயசேகர நன்றியுரையை நிகழ்த்தினார்.

# குடும்பப் பெண் கொலை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் இப்பலோகம பொலிஸ் பிரிவிலுள்ள ஹிரிப்பிட்டியாகம பகுதியில் பெண் ஒருவரை மொட்டை ஆயுதம் ஒன்றினால் தலையில் அடித்து கொலை செய்துள்ளதாக கிடைத்த தகவலுக்கு அமைய இப்பலோகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.


இச்சம்பவம் கடந்த 08 ஆம் திகதி இப்பலோகம ஹிரிப்பிட்டியாகம பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். 46 வயதுடைய இப்பலோகம ஹிரிப்பிட்டியாகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கணவனும் மனைவியும் சிறிது காலம் தற்காலிகமாக பிரிந்திரிந்த நிலையில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளார்.

# கொழும்பு லோட்டஸ் டவரில் பிரத்தியேக இப்தார் ஏற்பாடு







Foodie Sri Lanka நிறுவனம் கொழும்பில் உள்ள லோட்டஸ் டவருடன் இணைந்து பிரத்தியேக இப்தார் ஏற்பாடுகளை கடந்த மார்ச் 27 முதல் ஏப்ரல் 22 வரை நடத்துகிறது.

இலங்கையின் மிகச்சிறந்த விருந்து மண்டபம் மற்றும் சுழலும் உணவகம் ஒன்றில் ரமழான் மாதத்தை கொண்டாடும் வகையில், மூன்று முக்கிய உணவுகள் மற்றும் இந்திய மற்றும் அரபு உணவு வகைகள் உட்பட பல்வேறு வகையான உணவு வகைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

லோட்டஸ் டவரின் 1150 அடி உயரத்தில் அத்தகைய உணவை அனுபவிக்கும் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகரின் எழிலை அனுபவிக்கக்கூடிய சின்னமாக விளங்கும் இக்கோபுரமே 'நெலும் குளுனா' எனப்படுகிறது. ஆசியாவின் 11ஆவது உயரமான கோபுரமாக விளங்கும் இக்கோபுரம் உலகின் 19 வது உயரமான கோபுரமாகவும் உள்ளது. இலங்கையில் ரமழான் மாதத்தை கொண்டாடும் வகையில் இவ்வாறான சிறப்பு ஏற்பாட்டை ஆரம்பித்த முதலாவது நிறுவனமே Foodie Sri Lanka Pvt Ltd ஆகும். இந்த அனுபவத்தை அனுபவிக்க ஆர்வமுள்ள அனைத்து தரப்பினரும் முன்பதிவு செய்யலாம் அல்லது 0714554041 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப் செய்யலாம் என்று நிறுவனத்தின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை இலவச கண்புரை சத்திரசிகிச்சைக்காக 141 பேர் தெரிவு

*யாழ்.விசேட நிருபர்*



மருதங்கேணி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அம்பன், முள்ளியான் ஆகிய வைத்தியசாலைகளில் நடாத்தப்பட்ட கண்பரிசோதனை முகாம்களில் 141 பேர் இலவச கண்புரை சத்திரசிகிச்சைக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய நோயாளிகளுக்கான இலவச கண்புரை சத்திர சிகிச்சைத் திட்டம் யாழ்.போதனா வைத்தியசாலையில் முற்றிலும் இலவசமாக சில அமைப்புக்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் மருதங்கேணி, அம்பன், முள்ளியான் ஆகிய வைத்தியசாலைகளில் நடாத்தப்பட்ட கண்பரிசோதனை முகாம்களில் 141 பேர் கண்புரை சத்திரசிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதற் கட்டமாக 50 பேருக்கு எதிர்வரும் 18 ஆம் திகதியும், இரண்டாம் கட்டமாக 50 பேருக்கு எதிர்வரும் 25 ஆம் திகதியும் ஏனையவர்களுக்கு மே மாதத்திலும் கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்களை மருதங்கேணி பிரதேச செயலக பிரிவிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சையின் பின்னர் அவர்களை மீள மருதங்கேணிக்கு அழைத்துச் செல்வதற்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதார திணைக்களத்தினால் இலவசமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஏப்ரல் 18 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல் நாளான 17 ஆம் திகதி காலை 8 மணிக்கு மருதங்கேணி, அம்பன், முள்ளியான் வைத்தியசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி சத்திர சிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல் நாளான 24 ஆம் திகதி காலை 8 மணிக்கு வைத்தியசாலைகளுக்கு சமூகமளிக்க வேண்டும். சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அன்றைய தினம் மாலையிலேயே அவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து மருதங்கேணிக்கு அழைத்துச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதார திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு ஏற்கனவே சுகாதார திணைக்களத்தினால் தொலைபேசி மூலம் நேரடியாக அறியத்தரப்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட நோயாளர்களை உரிய நேரத்தில் சமூகமளித்து இத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கின் உதயம்

# விக்கிரகங்கள் தோண்டியெடுப்பு மிருசுவிலில் சம்பவம்

*கோப்பாய் குறூப் நிருபர்*



மிருசுவில் மன்னன் குறிச்சியில் வீட்டு வளவிலிருந்து 12 சிறிய விக்கிரகங்கள் தோண்டியெடுக்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் கடந்த 9ஆம் திகதி அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முத்தையா பாஸ்கரன் என்ற குடும்பத் தலைவர் தனது வீட்டு வளவில் விக்கிரகங்கள் உள்ளதாக கனவு கண்டுள்ளார். இதனையடுத்து அதிகாலை எழுந்து அவ்விடத்தை தோண்டிய போது பித்தளையிலான 12 சிறிய விக்கிரகங்களைக் கண்டதாக தெரிவித்துள்ளார்.

சிவன், சிவலிங்கம், வராகி அம்மன், ஆறுதலை முருகன், சிவனும் பார்வதியும் இடப வாகனத்தில் அமர்ந்திருக்கும் விக்கிரகம் , ஒற்றைத்தலை நாகம், ஐந்து தலை நாகம் ஆகிய விக்கிரகங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. அதனையடுத்து அவ்விடத்தில் கொட்டில் அமைத்து விக்கிரகங்களை வைத்து வழிபட்டு வருகின்றனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# அக்கராயன் கரும்பு தோட்ட காணிகளை பயன்படுத்த அமைச்சர் டக்ளஸ் தலைமையில் தீர்மானம்



கிளிநொச்சி, அக்கராயன் பகுதியிலுள்ள கரும்பு தோட்டக் காணிகளை பிரதேச மக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் பயன்படுத்துவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு அலுவலகம் கடற்றொழில் அமைச்சரும், கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவினால் உத்தியோகபூர்வமாக நேற்று 10.30 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதுதொடர்பில் அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், அக்கராயன் பகுதியிலுள்ள காணியில் கரும்பு செய்கையை மேற்கொள்வதற்கு தனியார் தொழில் முயற்சியாளர் ஒருவர் ஆர்வம் செலுத்தி வருகின்றார். சுமார் 10 ஏக்கர் காணியை தொழில் முயற்சியாளருக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்கும், மூன்று ஏக்கர் காணியை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்துக்கு வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயிர்செய்கைகள் மேற்கொள்வதற்கு பொருத்தமான 146 ஏக்கர் காணியை இப்பிரதேசத்தைச் சேர்ந்த காணி அற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் போன்ற முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

# மனநலம் பாதிக்கப்பட்ட நபரால் பாராமரிப்பாளர் குத்திக் கொலை

## யாழ். மீசாலையில் கொடூரச் சம்பவம்



யாழ். சாவகச்சேரி மீசாலை புத்தூர் சந்திப் பகுதியில் நோயாளர் நலன்புரிச் சங்க பராமரிப்பாளர் ஒருவர் அலவாங்கால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (11) பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மீசாலை புத்தூர் சந்திப்பகுதியில் வசித்துவரும் 20 வயதான இளைஞர் ஒருவர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் மனநல சிகிச்சைக்காக கடந்த செவ்வாய்க்கிழமை அனுமதிக் கப்பட்டிருந்தார்.

திங்கட்கிழமை (10) இளைஞன் வைத்தியசாலையிலிருந்து தப்பித்து புத்தூர் சந்தியிலுள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளார். தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் இளைஞரைப் பராமரித்து வந்த நோயாளர் நலன்புரிச் சங்கத்தைச் சேர்ந்த நி.நாகச்செல்வன் என்பவரும், இளைஞரின் உறவினர் ஒருவருமாக இளைஞரை மீண்டும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்காக வந்திருந்தனர்.

அப்போது, ரயில் கடவையில் அமர்ந்திருந்த மனநல சிகிச்சை பெற்று வந்த இளைஞரோடு நோயாளர் நலன்புரிச்சங்க பராமரிப்பாளர் உரையாடியதோடு, இளைஞரின் வீட்டுக்கும் அவரோடு சென்றுள்ளார். இதன் போதுஇளைஞரின்உறவினர்முச்சக்கர வண்டியோடு வீதியோரத்தில் காத்திருந்தார்.

வீட்டுக்குள்ளிருந்து மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞர் மட்டும் வெளியே வந்து மீண்டும் ரயில் கடவையில் சென்று அமர்ந்து கொண்டார். வீட்டுக்குள் சென்ற நோயாளர் நலன்புரிச் சங்க பராமரிப்பாளரை காணாத இளைஞரின் உறவினர் அவரது தொலைபேசிக்கு அழைப்பை எடுத்தார்.

நீண்ட நேரமாக அழைத்தும் பதில் கிடைக்காததால், ரயில்பாதையில் அமர்ந்திருந்த இளைஞரிடம் சென்று வினவியுள்ளார். இதன்போது, "பராமரிப்பாளரை வீட்டு முற்றத்தில் வைத்து அலவாங்கால் குத்தி கொலை செய்து விட்டேன்" என இளைஞர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து வீட்டு முற்றத்துக்கு சென்று பார்த்தபோது நலன்புரிச் சங்க பராமரிப்பாளர் முகத்தில் பலத்த காயங்களோடு சடலமாகக் கிடந்துள்ளார். சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் இளைஞரை கைது செய்துள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் ஆனைக்கோட்டை தெற்கு கூழாவடியைச் சேர்ந்த குடும்பஸ்தரான நி.நாகச்செல்வன் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சூறாவளியால் முறிந்த

# மரக்கிளை அகற்றப்படாமையால் பொதுமக்களுக்கு அச்சுறுத்தல்

*ஓமந்தை விசேட நிருபர்*



வவுனியாவில் அண்மையில் வீசிய மினிசூறாவளியுடன் கூடிய மழையினால் முறிந்த மரமொன்று அகற்றப்படாமையால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தலாக மாறியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்ட செயலக வாயிலில் அமைந்துள்ள மரத்தின் பாரிய கிளையொன்று முறிந்து மின்சார இணைப்பின் மீது வீழ்ந்தது. எனினும் சூறாவளி வீசி 20 நாட்கள் கடந்துவிட்ட போதிலும் உரிய நேரத்தில் அதை அகற்றாமையால் பொதுமக்களுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இது பொதுமக்களின் நடைபாதையாக இருப்பதுடன், மாவட்ட செயலகம், பொது வைத்தியசாலை என்பவற்றுக்கு அருகில் இருப்பதால் அதிக சனநடமாட்டம் உள்ள பகுதியாக காணப்படுகின்றது.

அத்துடன் மரக்கிளை மின்சார இணைப்பின் மீது வீழ்ந்துள்ளமையால் அது அறுந்து விழும் அபாயமும் காணப்படுகின்றது. எனவே அசம்பாவிதங்கள் ஏற்படுவதற்கு முன்னர் மரக்கிளையை உடனடியாக அகற்றுமாறும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பூநகரியில் இறங்குதுறை வசதிகளின்மையால் 460இற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் பாதிப்பு

*பரந்தன் குறூப் நிருபர்*



கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் இறங்குதுறை வசதிகளின்மையால் கடற்றொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

அதிகளவான கடற்றொழிலாளர்களைக் கொண்ட பூநகரி பள்ளிக்குடா பகுதியில் சுமார் 460ற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் இறங்குதுறை வசதிகளின்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான கடற்றொழிலாளர்களைக் கொண்ட பகுதியாக பூநகரி பள்ளிக்குடா பிரதேசம் காணப்படுகிறது.

இப்பகுதியில் சுமார் 460 கடற்றொழிலாளர்கள்300ற்கும்மேற்பட்ட படகுகளில் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் உரிய இறங்குதுறை வசதிகள் இன்மையால் தமது படகுகள் மற்றும் இயந்திரங்களை தொழிலுக்கு கொண்டு செல்வதிலும் தொழிலுக்கு சென்று திரும்புவதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு இப்பகுதியில் இறங்குதுறையை ஆழப்படுத்தி புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் அவை இடைநடுவில் கைவிடப்பட்டமையால் கடற்றொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனால் நாளாந்தம் இயந்திரங்கள், படகுகள் தொடர்ச்சியாக சேதமடைந்து வருவதாக கடற்றொழிலாளர்கள்தெரிவித்துள்ளனர். மீன்பிடி நடவடிக்கைகள் மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட அதிக செலவுகளை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தமக்கான இறங்குதுறையை உரியவாறு ஆழப்படுத்தி புனரமைத்து தருமாறும் கடற்கரையோரப்பகுதிகளை கடலரிப்பிலிருந்து பாதுகாத்துக்கொள்ள ஏற்ற வகையில் தடுப்புச் சுவர்களை அமைத்து தருமாறும் கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபட்ட இளம் பெண் கைது

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம் பொம்மைவெளி பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன்பெண்ணொருவர்கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரிடமிருந்து 5.5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 70 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப் பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிர்க்கொல்லி போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுவதாக நீண்ட நாட்களாக தேடப்பட்டு வந்த பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பருத்தித்துறை வைத்தியசாலையில் பிறந்த குழந்தை உயிரிழப்பு

*நாகர்கோவில் விசேட நிருபர்*

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிறந்த குழந்தையொன்று உயிரிழந்துள்ளது. புலோலியைச் சேர்ந்த றொசாயினி அஜந்தன் என்ற பெண் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் குழந்தை பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை(11) பிற்பகல் அவருக்கு குழந்தை பிறந்து இறந்ததாக தெரிவிக் கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் நேற்று புதன்கிழமை (12) பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா வைத்தியசாலைக்கு சென்று மரண விசாரணைகளை மேற்கொண்டுபிரேதபரிசோதனைக்குஉத்தரவிட்டுள்ளார்.

# யாழ். நகரில் கருவாட்டுக்கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை

*யாழ்.விசேட நிருபர்*



கருவாடு விற்பனை நிலையங்களில் உரிய சுகாதார விதிமுறைகளை பேணுமாறு யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டு அதற்கு காலஅவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார விதிமுறைகளை பேணாத உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். நகர் பகுதியிலுள்ள கருவாட்டு கடைகள் யாழ்.மாநகர பொது சுகாதார பரிசோதகர்களினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது, தெருவோரத்திலுள்ள மாசுக்களால் மாசடையக்கூடிய வகையில் கருவாடுகள் வைத்திருந்த கடை உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

தெருவோரம் கருவாடுகள் வைத்து விற்பனை செய்வதாயின் கண்ணாடி பெட்டிக்குள் வைத்து விற்பனை செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டது. அத்துடன் கருவாடுகளை தூசு படியும் வகையிலும், அழுக்கான துரு பிடிந்த கம்பிகளிலும் குத்தி தொங்கவிடப்பட்டிருந்த கடை உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

கருவாடுகள் அனைத்தையும் பொலித்தீனால் மூடி தூசுக்கள் படாதவாறு காட்சிப்படுத்துமாறும் பொது சுகாதார பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதற்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்பட்டதுடன், கால அவகாசத்தின் பின்னரும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தவறின் அவர்களுக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொது சுகாதார பரிசோதகர்களால் கடை உரிமையாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




சுன்னாகம் மைலானியில் வாழும் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. கனடாவிலிருக்கும் 'லான் மல்டிமீடியா' நிறுவனங்களின் பங்களிப்பில் டாக்டர் சௌந்தர்ராஜனின் வேண்டுகோளுக்கமைய லயன் கலாநிதி நாகலிங்கம் தனேந்திரன், இ.சற்குருநாதன் மற்றும் டாக்டர் ஜோசப் ஆகியோர் வழங்கிவைத்தனர்.

# 30 ஆவது அகவையை நோக்கி முகத்துவாரம் மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயம்

*இலங்கை தேசம் ஆசீர்வதிக்கப்படுவதாக
*இந்த தேசம் கர்த்தருடையது

























யுத்த சூழல் நிலவிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு சவால்களையும் கடந்து இன்று ஆன்மீக பரப்புதலின் பலமிக்க அத்திவாரமான சபையாக திகழ்கின்றது.

இதன் ஸ்தாபகர் போதகர் ஜே.ஜே. சாரங்கபாணியின் நெறிப்படுத்தலின் கீழ் 30ஆவது அகவை பூர்த்தியினை சிறப்பிக்கும் வண்ணம் இன்று முதல் 16ம் திகதிவரை மேற்படி ஆலயத்தில் ஆன்மீக எழுச்சி மகாநாடு நடை பெறவுள்ளது.

இன்று மாலை 4 மணி முதல் 30ஆவது ஆண்டினை அடையச்செய்த தேவனுக்கு நன்றி செலுத்தும் சிறப்பாராதனை இடம்பெறுகிறது. 14ஆம் திகதி காலை 8 மணிக்கு "கிறிஸ்தவ வாழ்க்கையில் மாற்றம்" எனும் தொனிப்பொருளில் கருத்தரங்கு நடைபெறும். 15ஆம் திகதி காலை முதல் நாள் கருத்தரங்கின் தொடர்ச்சி இடம்பெறும் 15ஆம் திகதி 4 மணி முதல் இளைஞர் சமூகத்தின் பங்களிப்புடன் "சுவிஷேசத்தை அறிவியுங்கள்" என்னும் தொனிப்பொருளிலான பாசறை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, முள்ளியவளை, பளை, யாழ்ப்பாணம், கண்டி, நாவலப்பிட்டி, பலாங்கொடை உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளிலும் இயங்கும் மிஷனரியின் விசுவாசிகள் இவர்களுக்கான தங்குமிடம், உணவு முதலான அடிப்படை வசதிகள் யாவும் இலவசமாகவே வழங்கப்படும்.

கடந்த மூன்று தசாப்தங்களாக ஆன்மீக எழுச்சிக்கான அர்ப்பணிப்புகளுடன் இளைஞர்களுக்கிடையே சுவிஷேச விழிப்புணர்வு, தலைமைத்துவ பயிற்சி போன்ற பல்வேறு முன்னெடுப்புகளுடன் செயற்பட்டு வரும் மிஷனரி ஊழியர் சமூக சேவைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு செயற்படுவது சிறப்பம்சமாகும்.

குறிப்பாக கல்வி அபிவிருத்திக்காக பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. கிளிநொச்சி, பாரதிபுரம் போன்ற இடங்களில் முன்பள்ளிகளை உருவாக்கி இலவச கற்றல் வசதியை ஏற்படுத்தித்தந்துள்ளது. நலிவுற்ற குடும்பங்களுக்கு உதவிக்கரம் நீட்டுவது இதன் ஓர் அங்கமாகும்.

அனைத்து மதங்களுக்கிடையிலும் நல்லிணக்கமும் புரிந்துணர்வும் ஏற்பட வேண்டும் என்னும் உயரிய இலக்கோடு இச்சபையை வழிநடத்தி வருகின்றார் போதகர் சாரங்கபாணி அவரின் முயற்சிகளுக்கு இயேசு கிறிஸ்துவின் ஆசீர்வாதம், அபரிமிதமாக கிடைத்து வருவதாலேயே 30ஆவது அகவையை ஆக்கப்பூர்வமானதாக அடைய முடிந்துள்ளமை உணர்த்துகின்றது என்றால் அதுமிகையல்ல.











தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

# ஜயசூரியவின் 'இலங்கை கிரிக்கெட்' ஆலோசனை குழுவின் பணி ஆரம்பம்



இலங்கை கிரிக்கெட் சபைக்கான தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவின் புதிதாக நியமிக்கப்பட்ட சனத் ஜயசூரிய தலைமையிலான உறுப்பினர்களுக்கு விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு அமைச்சில் கடந்த செவ்வாய்க்கிழமை (11) இடம்பெற்றது.

இந்த ஐவர் கொண்ட தொழில்நுட்பக் குழு இலங்கை கிரிக்கெட்டுக்கு தொழில்நுட்ப விடயங்கள் குறித்து ஆலோசனை வழங்குவது மற்றும் அண்மைக் காலத்தில் வீரர்கள் தேர்வுகள் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் என்று இந்த நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் ரணசிங்க தெரிவித்தார்.

"அண்மைக் காலத்தில் ஒரு கிரிக்கெட் நாடாக இலங்கை பெரும் பின்னடைவை சந்தித்திருப்பதை பார்க்கிறோம். என்ன தவறு நிகழ்ந்தது என்பதை நாம் ஆராய வேண்டி இருப்பதோடு அடுத்த உலகக் கிண்ணத்தை நாட்டுக்குக் கொண்டுவர திட்டங்களை வகுக்க வேண்டும். புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் இந்த புதிய குழுவுடன் பணியாற்றுவதற்கும் எமது இலக்குகளை வெற்றிகரமாக அடையவும் நாம் உறுதியாக உள்ளோம்" என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் பேசிய சனத் ஜயசூரிய, எதிர்வரும் உலகக் கிண்ணத்தில் தனது இடத்தை உறுதி செய்ய தகுதிகாண் போட்டியில் ஆடவேண்டியதை இட்டு தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார். தோல்விக்கான காரணத்தை ஆராய்வதும் இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் தமது திறமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுப்பதும் முக்கியம் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

"அண்மைக் காலத்தில் தேசிய அணி வீழ்ச்சிப் பாதையில் செல்வது குறித்து தேர்வுக் குழுவினர், பயிற்சியாளர்கள் மற்றும் இலங்கை கிரிக்கெட் அதிகாரிகளுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம். அந்த பேச்சுவார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கிரிக்கெட்டை மீண்டும் வலுப்படுத்துவதற்கு தேவைப்படும் நடவடிக்கைகளை நாம் எடுப்போம். எதிர்வரும் உலகக் கிண்ணத்திற்கு வலுவான அணி ஒன்றை தயார்படுத்துவதே எமது பிரதான இலக்காகும்" என்று ஜயசூரிய குறிப்பிட்டார்.

நியமிக்கப்பட்டிருக்கும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான பர்வீஸ் மஹ்ரூப், அசந்த டி மேல், கபில விஜேகுணவர்தன மற்றும் சரித் சேனநாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

# அம்பாறை மெய்வல்லுனர் தலைவரானார் நாராயண



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவராக மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.ஜி.வி.யு நாராயண தெரிவு செய்யப்பட்டார்.

சாய்ந்தமருது தனியார் விடுதி ஒன்றில் அண்மையில் நடைபெற்ற அம்பாறை மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திலேயே தலைவர் மற்றும் புதிய நிருவாகம் தெரிவு செய்யப்பட்டது. இதில் உடற்கல்வி ஆசிரியர் அலியார் பைஸர் செயலாளராகவும், இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த ஏ.எல்.எம் அஸ்ரப் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

15 பிரதேச செயலகங்கள், இலங்கை தென்கிழக்கு பல்கலைகழகம் ஆகிய 16 சங்க பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் இலங்கை மெய்வல்லுனர் சங்க பிரதிநிதியின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

# இலங்கை ரக்பி கலைப்பு



இலங்கை ரக்பி நிறுவனத்தை கலைத்துள்ள விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நிலைக்குழு ஒன்றை நியமித்துள்ளார். 1973இன் 25 ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாட்டின்படியே இலங்கை ரக்பி கலைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஏ பிரிவு கழகங்களுக்கு வாக்குரிமை அளிக்க முடியுமான வகையில் யாப்பில் மாற்றங்கள் கொண்டுவருவது நேற்று (12) நியமிக்கப்பட்ட நிலைக்குழுவின் பிரதான பொறுப்பாக உள்ளது. மாகாண சபைகளின் அதிகாரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாகவே இந்த மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நியமனத்தின் மூலம் இலங்கை ரக்பி தலைவர் ரிஸ்லி இல்யாஸின் பதவிக்காலம் முடிவுக்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனினும் நிலைக்குழு பற்றி தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று இல்யாஸ் முன்னதாக தெரிவித்திருந்தார். 'இலங்கை ரக்பி என்ற வகையில் எமக்கு எந்த அறிவுறுத்தலும் வழங்கப்படாத நிலையில் இது பற்றி நான் என்ன கூற முடியும்' என்று இது தொடர்பில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று முன்னதாக வினவியபோது அவர் குறிப்பிட்டிருந்தார்.

# சாமரி அதபத்து அதிரடி ஆட்டம்



ஹொங்கொங்கில் நடைபெற்று வரும் மகளிருக்கான பெயார்பிரேக் இன்விடேஷனல் டி20 லீக் தொடரில் இலங்கை அணியின் தலைவி சாமரி அதபத்து அதிரடித் துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

பல்கோன்ஸ் மகளிர் அணிக்காக விளையாடி வரும் சாமரி அதபத்து சப்பாயர்ஸ் மகளிர் அணிக்கு எதிரான போட்டியில் 44 பந்துகளில் 75 ஓட்டங்களை விளாசியதுடன், அணியை வெற்றிக்கும் அழைத்துச்சென்றுள்ளார்.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சப்பாயர்ஸ் மகளிர் அணியை 131 ஓட்டங்களுக்கு பல்கோன்ஸ் மகளிர் அணி கட்டுப்படுத்தியது. இதன்போது பந்துவீச்சிலும் பிரகாசித்திருந்த சாமரி அதபத்து 3 ஓவர்களுக்கு 29 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டினை கைப்பற்றியிருந்தார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்ற பல்கோன்ஸ் மகளிர் அணி 2 வெற்றிகளுடன் புள்ளிப்பட்டியலில் 3ஆவது இடத்தை பிடித்துள்ளது.

# இளையோர் வலைப்பந்து அணித் தேர்வில் இழுபறி



தென் கொரியாவில் நடைபெறும் ஆசிய இளையோர் வலைப் பந்து போட்டிக்கு பரிந்துரைக்கப்பட்ட இலங்கை வலைப் பந்து அணியின் தெரிவை இரத்துச் செய்து மீண்டும் அதற்காக தேர்வை மேற்கொள்ளும்படி தேசிய விளையாட்டு தெரிவுக் குழு விடுத்த கோரிக்கையை தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு நிராகரித்துள்ளது.

பதவியில் இருந்து இராஜினாமா செய்வதைத் தவிர அதற்கு வேறு எந்த மாற்றும் இல்லை என்று தேசிய விளையாட்டு தெரிவுக் குழுவின் செயலாளர் அர்ஜுன பெர்னாண்டோவுக்கு தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு தலைவி தமயந்தி ஜயதிலக்க அறிவித்திருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

தென் கொரியாவின் ஜயோன்ஜு நகரில் அடுத்த ஆசிய இளையோர் வலைப்பந்து போட்டி வரும் ஜூலை 10 தொடக்கம் 17 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. அதற்காக 12 வீராங்கனைகள் மற்றும் மூன்று மேலதிக வீராங்கனைகளைக் கொண்ட இலங்கை குழாம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

என்றபோதும் தேசிய வலைப்பந்து தெரிவுக் குழு பரிந்துரைத்த இலங்கை அணிக்கு தேசிய கனிஷ்ட வலைப்பந்து பயிற்சியாளர் அமல்கா குணதிலக்கவின் அதிருப்தி வெளியாகி இருந்தது.

அணியில் உள்ளடக்கப்பட்டிருக்கும் வீராங்கனைகள் தொடர்பில் தமக்கு திருப்தி அடைய முடியவில்லை என்று அவர் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே அணித் தேர்வை மீண்டும் மேற்கொள்ளும்படி தேசிய விளையாட்டுத் தெரிவுக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்வு செய்யப்பட்டிருக்கும் அணி ஏற்கனவே தமது பயிற்சிகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மைக்கல் ஜோர்டன் காலணி 2.2 மில். டொலருக்கு ஏலம்



பிரபல கூடைப்பந்து வீரர் மைக்கல் ஜோர்டன் அணிந்திருந்த காலணிகள் 2.2 மில்லியன் டொலருக்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளன.

போட்டிகளில் அணியப்பட்ட காலணிகளிலேயே மிக அதிக விலைக்கு ஏலத்தில் விற்கப்பட்டுள்ள காலணிகள் இவையாகும்.

ஜோர்டன் போட்டிகளின்போது அணிந்திருந்த காலணிகள், ஜெர்சி சட்டைகள் ஆகியவற்றுக்கான தேவை எதிர்பார்த்ததை விட அதிகமாக இருப்பதை அது நிரூபிப்பதாகக் கூறப்பட்டது.

ஏலம் போயுள்ள காலணிகளை ஜோர்டன் 1998ஆம் ஆண்டு நடந்த என்.பி.ஏ போட்டியின் இறுதிச்சுற்றில் அணிந்திருந்தார். அந்தச் சுற்றில் ஜோர்டனின் சிக்காகோ புல்ஸ் அணி வெற்றிபெற்று என்.பி.ஏ போட்டியை வென்றது. அது ஜோர்டனின் ஆறாவது என்.பி.ஏ வெற்றியாக இருந்தது.

இறுதிச்சுற்று முடிந்தவுடன் அவர் காலணிகளில் கையெழுத்திட்டு அதைத் திடலிலிருந்து வெளியில் போகும் பந்துகளை எடுத்துக்கொடுக்கும் சிறுவனிடம் கொடுத்தார்.

ஆனால் ஏலத்தில் காலணிகளை விற்றது அந்தச் சிறுவன் அல்ல. ஏலத்தில் விற்றதும் வாங்கியதும் யார் என்பதை சோதபிஸ் நிறுவனம் குறிப்பிடவில்லை.

# செவ்வாய்க்கு மனிதனை அனுப்ப நாசா சோதனை



நான்கு சிறிய அறைகள், உடற்பயிற்சிக் கூடம் மற்றும் சிவப்பு மணலைக் கொண்ட செவ்வாய்க் கிரகத்தை உருவகப்படுத்தும் வசிப்பிடத்தை நாசா அறிமுகப்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் செவ்வாய் பயணத் திட்டத்திற்கான சோதனை முயற்சியாக இங்கு தன்னார்வலர்கள் ஓர் ஆண்டு வாழவுள்ளனர்.

டெக்சாசின், ஹூஸ்டனில் உள்ள அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையத்தின் பிரமாண்ட ஆய்வு தளத்திலேயே இந்த மாதிரி வசிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோடை காலத்தில் ஆரம்பமாகும் முதல் சோதனையில் நான்கு தன்னார்வலர்கள் பங்கேற்கவுள்ளனர். இதில் நீண்ட கால தனிமையில் மனிதனின் உடல் மற்றும் உள சுகாதாரம் தொடர்பில் கண்காணிக்கப்படவுள்ளது.

இந்தத் தன்னார்வலர்கள் இரண்டு குளியலறைகள், காய்கறிப் பண்ணை, மருத்துவ பராமரிப்புக்கான ஓர் அறை, ஓய்வு எடுப்பதற்கான ஒரு பகுதி மற்றும் பல்வேறு வேலை நிலையங்களைக் கொண்ட 1,700 சதுர அடிப் வசிப்பிடத்திற்குள்ளேயே ஓர் ஆண்டு காலம் வாழவுள்ளனர்.

இதன் வெளிப்பகுதி, செவ்வாயின் சுற்றுச்சூழலுக்கு அமைய காற்று அடைக்கப்பட்ட பகுதியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நாசா நிலவுக்கு மீண்டும் மனிதனை அனுப்பும் திட்டத்தில் அதிக அவதானம் செலுத்தி வரும் நிலையில் அண்டை கிரகமான செவ்வாய்க்கு மனிதனை அனுப்பும் திட்டம் ஆரம்பக் கட்டத்திலேயே உள்ளது.

# டிக்டொக் செயலிக்கு தடை




பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து வீடியோ பகிர்வுகளை மேற்கொள்ளும் டிக்டொக் செயலி அவுஸ்திரேலிய அரச சாதனங்களில் தடை செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, பிரிட்டன், நியூசிலாந்து ஆகிய நான்கு நாடுகளும் அரச சாதனங்களில் இச்செயலியை ஏற்கனவே தடை செய்துள்ளன. உளவுத்துறை கூட்டணியில் ஐந்தாவது கண்ணாக விளங்கும் அவுஸ்திரேலியா தற்போது இச்செயலியினை தடை செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# மியன்மார் இராணுவத்தின் வான் தாக்குதலில் 100 பேர் வரை பலி

## தாக்குதலை உறுதி செய்தது இராணுவம்



பெண்கள் மற்றும் நடன நிகழ்ச்சியில் பங்கேற்ற பாடசாலை சிறுவர்கள் உட்பட குறைந்தது 100 பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் மத்திய சகைன் பிராந்தியத்தில் உள்ள சமூகக் கூடம் ஒன்றின் மீது வான் தாக்குதல் நடத்தியதை மியன்மார் இராணுவம் ஒப்புக்கொண்டுள்ளது.

பா சி கியி கிராமத்தில் உள்ள இராணுவ ஆட்சியை எதிர்க்கும் ஆயுதக் குழு ஒன்றின் அலுவலகம் திறக்கப்படும் விழா மீது பாதுகாப்புப் படை கடந்த செவ்வாய்க்கிழமை (11) தாக்குதல் நடத்தியதாக இராணுவ பேச்சாளர் சோ மின் டுன் குறிப்பிட்டுள்ளார்.

இதில் கொல்லப்பட்ட சிலர் இராணுவ சதிப்புரட்சிக்கு எதிரான போராளிகள் என்றும் சிவில் உடை அணிந்த சிலரும் பலியாகி இருப்பதாகவும் அவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

சமூகக் கூடத்தின் மீது கடந்த செவ்வாய்க்கிழமை காலை போர் விமானங்கள் குண்டுகளை வீசியதாக சம்பவத்தை பார்த்தவர்கள் உள்ளூர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர். இந்த குண்டுவீச்சுக்குப் பின்னர் உயிர் தப்பியவர்கள் மீது ஹெலியில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் மீட்பு நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலை கடுமையாகக் கண்டித்திருக்கும் ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ், "இதனைச் செய்தவர்கள் பொறுப்புக் கூற வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். அமெரிக்காவும் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

இதனை ஒரு பயங்கரச் சம்பவம் என்று வர்ணித்திருக்கும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் வோல்கர் டுர்க், சர்வதேச சட்டத்தை அப்பட்டமாக மீறும் செயல் என குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரில் 2021 பெப்ரவரியில் ஆட்சியை கைப்பற்றிய இராணுவம் அதன் எதிர்ப்பாளர்களுக்கு எதிரான வான் தாக்குதல்களை பயன்படுத்துவதை அதிகரித்துள்ளது.

இராணுவ சதிப்புரட்சிக்கு சகைன் பிராந்தியத்தில் எதிர்ப்பு வலுத்ததோடு அந்த சமூகத்தினர் சொந்த ஆயுதக் குழுவை உருவாக்கி செயற்படுவதோடு சொந்தமாக பாடசாலை மற்றும் மருத்துவ நிலையங்களையும் நடத்தி வருகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 13ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.